Registered as a News Paper பக்கங்கள்: 08 விலை ரூபா: 6-00

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 12 (28 - 08 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை 192

## இடம்பெயர்ந்த ஆசிரியர்; யாழ் திரும்ப பணிப்பு

யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து பிற மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் தற்காலிக மாகக் கடமையாற்றும் தமிழர்களான ஆசிரியர்களைச் செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் அவர்களுடைய பாடசாலைகளுக்கே அனுப்பி வைக்கு மாறு வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதுகுறித்த சுற்றுநிருபம் ஒன்றினை வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வட, கிழக்கு மாகா [8ஆம் பக்கம் பார்க்க]

# மாதகலில் நேற்று கடும் சமர்

# லெப்.கேணல்ராஜன்வீரச்சாவு

## மேலும் 8 போராளிகள் வீரமரணம்
## ராணுவ தரப்பில் பலத்த சேதம்

(நமது நிருபர்)

மாதகல் பகுதியில் நேற்றுக் காலை எதிர்பாராத விதமாக விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. சுமார் 30 நிமிடங்கள்வரை நீடித்த இச் சண்டையில் இராணுவத்தரப்பிற்குப் பலத்த உயிரிழப்பு ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. இதேவேளை விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். கேணல் ராஜன் [மாதகல்] உட்பட ஒன்பது போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

நேற்றுக்காலை 7.00 மணியளவில் மாதகல் பகுதியில் இருந்து புலிகளின் நிலைகளை நோக்கி துப்புரவு செய்யும் நோக்கில்பெருந்தொகையான இராணுவத்தினர் வெளியேறி வந்தபோதே இக்கடும்மோதல் மூண்டது.

முப்பது நிமிடங்கள் வரை நீடித்த இச்சண்டையில் ஏற்பட்ட பெரும் இழப்பைத் தொடர்ந்து இராணுவத்தினர் உடனடியாகத் தமது நிலைகளுக்குத் திரும்பினர்.

இச்சண்டையில் வீரச்சாவை தழுவிக்கொண்ட ஒன்பது போராளிகளின் விபரம் வருமாறு:

★ முன்னாள் யாழ். மாவட்டத் தளபதியாகவும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைபிரிவின்சிறப்புத்தளபதியாகவும் தற்போதைய அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பாளருமான, லெப்டினன்ட் கேணல் ராஜன் (சோமசுந்தரம் சற்குணம்-மாதகல்மேற்கு மாதகல்),

★ கப்டன் கணேசன் (கணேஸ்) (புண்ணியமூர்த்தி ரகு- 2ஆம் யூனிட் கந்தளாய், திருமலை),

★ கப்டன் வன்னியன் (கணபதிப்பிள்ளை கணநாதன்- கொக்காவில் வீதி, துணுக்காய்),

★ லெப்டினன்ட் தயாபரன் (பார்த்தீபன்) (சிவசுப்பிரமணியம் சிவசொரூபன்- யோகபுரம், மல்லாவி),

★ லெப்டினன்ட் அருளையன்(பிரதீப்)(சாமித்தம்பி மகிந்தன்-புதுக்குடியிருப்பு வாழைச்சேனை)

★ 2ம்லெப்டினன்ட்இளங்கோ (யோகராஜா)(பாஸ்கரன் பிரபாகரன் - காங்கேசன் துறை, தையிட்டி)


★ வீரவேங்கை கலைச்செல்வன் (குகன்) (இருதயநாதன் புனிதராஜன் - 2ம் குறுக்குத்தெரு, பருத்தித் துறை)

★ வீரவேங்கை அறிவழகன் (நாகலிங்கம் சிவ குமார்- குப்பிளான் தெற்கு குப்பிளான்)

★ வீரவேங்கை மதியழகன் (நடராஜா பூவலிங்கம்- மாங்குளம்)

வீரச்சாவடைந்த இவ் ஒன்பது வீரவேங்கைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வீரவேங்கைசேகர் வீரச்சாவு



பண்டத்தரிப்பு பகுதியில் நேற்று முன்தினம் (26-8-1992) காலை 10.30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த வீரவேங்கை சேகர் (தங்கராஜா ஶ்ரீஸ்கந்தராஜா, சுப்பர்மடம் பருத்தித்துறை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## அகதிகளை வெளியேற்ற சுவிஸ் அரசு முயற்சி

(கொழும்பு)

சுவிற்சலாந்திலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றுவதற்கு சுவிற்சலாந்து அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப சாதகமானசூழ்நிலை இலங்கையில் நிலவுகிறதா என்பதை அறியவென சுவிஸ் தூதுக்குழு ஒன்று சென்ற மாதம் கொழும்புவந்திருந்தது

அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது ஐந்து வருட காலத்திற்கு நீடிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அகதிகளை அனுப்ப தடை; தமிழக அரசு மேன்முறையீடு

சென்னை மேல் நீதிமன்ற உத்தரவொன்றினைத் தொடர்ந்து தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது இடை நிறுத்தப் பட்டுள்ளது

எனினும் தமிழ்நாட்டு அரசாங்கம் நீதிமன்றின் இந்த உத்தரவை எதிர்த்து மேன்முறையீடு செய்யவுள்ளது என புனர்வாழ்வு, புனர்நிர்மாண சமூகநலத்துறை அமைச்சினால் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாடொன்றில் அமைச்சின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் குடியிருப்புக்கள் மீது அகோர எறிகணை வீச்சு

(நமது நிருபர்)

மாதகல் பகுதியை ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று அதிகாலை சில்லாலை, பனிப்புலம் பகுதிகளை நோக்கி அகோர எறிகணைத்தாக்குதல்களை நடாத்தினர்.

சுமார் இரண்டு மணி நேரம் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் போது பெருந்தொகையான எறிகணைகளை இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புகள் மீதுஏவினர்,

இதன் போது அரசடி வீதியைச் சேர்ந்த மகேந்திரராசா (வயது 45) சங்கானை மேற்கைச் சேர்ந்த பாலச்சந்திரன் (வயது 28) ஆகியோர் படுகாயமடைந்ததுடன் பல வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இத்தாக்குதலின் போது படுகாயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர் (ச)

## தமிழர் காணிகள் சிங்களவருக்குப் பகிர்வு

மட்டக்களப்பில் கல்முனையையடுத்துள்ள கடற்கரை ஓரமாக அத்துமீறிக் குடியமர்த்தப்பட்டுள்ள 800 சிங்கள முஸ்லிம் குடும்பங்களுக்கு நிரந்தர காணி உறுதிகளைச் சிறிலங்கா அரசு வழங்கியுள்ளது.

இவர்களுக்கு காணி உறுதி வழங்கப்பட்ட இடம் தமிழ் மீனவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நிரந்தர காணி உறுதிகள் வழங்கப்பட்ட சிங்கள முஸ்லிம் மக்களுக்கு [8 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளைக் கைது செய்வதற்காக இந்தியா எல்லை தாண்டக் கூடாது

**- ஐ. கே. குஜ்ரால்**

(கொழும்பு)

புலிகளின்தலைவரைக் கைது செய்வதற்காக, இந்தியா தேசிய எல்லைகளைத் தாண்டக் கூடாது.

மேற்கண்டவாறு கடந்த திங்களன்றுகொழும்பில்உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பத்திரிகையாளர் மாநாடொன்றில் இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்திய ராஜ்ய சபையில் எதிர்க்கட்சி உறுப்பினராய் உள்ள குஜ்ரால், முன்னாள் சோவியத் யூனியனுக்கான இந்தியத் தூதுவராயும் இருந்துள்ளார்.

அவர் மேலும் தொடர்கையில், எதிர்காலத்தில் இனப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை பிற்போடப்பட்டது

(டில்லி)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதிக்கப்பட்டிருப்பது தொடர்பாக தாக்கலான மனுவை விசாரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட புது டில்லி விசேட நீதிமன்றம் விசாரணையை பிற்போட்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 'குமண' அடுத்தவாரமே வரும்

(கொழும்பு)

கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நிற்கும் ''குமண'' என்ற கப்பலில் நத்தைவேகத்தில் பொருள்கள் ஏற்றப்படுகின்றன. இதனால் அடுத்த மாதமே இக்கப்பல் பருத்தித்துறை துறை முகத்தை வந்தடையும் என்று எதிர் பார்க்கப் படுகிறது. (க)

**நீரைச் சேமிப்போம்**
**ஊரைச் செழிக்க வைப்போம்**

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

24-08-92 இல் தவராசசேகரம் (மட்டுவில்) கிளாலிப் பாதையூடாக யாழ். வரும்போது பாஸ்போட் அடங்கிய நீலநிற பிரயாணப்பை ஒன்று தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (3093)

## நீமியா உரம்

நீமியா உரம் நெற்பயிருக்குச் சிறந்த அடிக்கட்டுபசளை எனக் கண்டறியப்பட்டுள்ளது. வளர்ச்சியின்போது பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாப்பு. அதிகரித்த விளைச்சல். ஒருகிலோ 15/-ரூபா. 20 கிலோ பைக்கற் ரூபா 260/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. ''மில்க்வைற்''. (சி/4951)

## 'நிழல்கள்' சிறுகதைத் தொகுப்பு

''அக்கினியில் கருகும் ஆத்மாக்கள்'' மூலம் முதற் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட செல்வி சந்திரா தியாகராசா (திருமதி சந்திரா இரவீந்திரன்) வின் பரிசுபெற்ற சிறுகதைகள், குறுநாவல் அடங்கிய ''நிழல்கள்'' பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், உதயன் புத்தகசாலை பருத்தித்துறை ஆகிய இடங்களில் விற்பனையாகின்றது. (3071)

## விற்பனைக்கு

இருபாலாருக்குமுரிய Seiko, Citizen ஓட்டோமற்றிக்; Casio-Solar விற்பனைக்குண்டு. கடிகாரங்கள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப் பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (3079)

## எழுதுநர் பரீட்சை

எழுதுநர் போட்டிப் பரீட்சைத் தகுதித் தேர்வுக்கான மாதிரிப்பயிற்சி நூல் 'பொது விவேகப்பயிற்சிகள்' 10-09-92 இல் வெளிவருகின்றது. ஆக்கம்: க.குணராசா எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (3087)

---

**ENGLISH ASSISTANT TEACHERS**

செப்ரெம்பர்மாத இறுதியில் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கான

**துரித பயிற்சி வகுப்புக்கள்**

சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்

ஆரம்பம் : 29 - 08 - 92 10.30 மணி

Lectures By Mr. S. SABANAYAGAM

Full Course Fees 250/-

மேலும் விபரங்களுக்கு

**School of Business Administration**

16, 3rd Cr0ss Street, JAFFNA.

(சி-4949)

---

# கரவெட்டி வட்டவைப்பிரிவில் சமூக மேம்பாட்டுத் திட்டம்

பருத்தித்துறை, கரவெட்டி வட்ட அவைப் பிரிவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள கிராமங்கள் தோறும் கஷ்டப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் விடுதலைப் புலிகளின் அரசியற்றுறையினர் அப்பகுதி மக்களுடன் இணைந்து பல சமூக மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் பருத்தித்துறை வட்ட அவைப்பிரிவில் செயலிழந்து இருந்த புலோலி தெற்கு தீபஜோதி சனசமூக நிலையம், பொலிகண்டி மானாங்கனை சனசமூக நிலையம் ஆகிய சனசமூக நிலையங்களை மீண்டும் செயற்பட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

மேலும் உபயகதிர்கா[illegible] கிராமத்தில் சிங்கைநகர் சனசமூக நிலையம், வல்லிபுர குறிச்சி சனசமூக நிலையம் ஆகிய இரு சனசமூக நிலையங்களை புதிதாக அமைத்து வருகின்றனர்

கரவெட்டி வட்ட அவைப் பிரிவில் அல்வாய் கிழக்கு மாயக்கை சனசமூக நிலையத்தை துரிதமாக புனரமைத்து வருகின்றனர்

இதற்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை வட்ட அவைப் பொறுப்பாளர் திரு.பா.பைந்தமிழனும், கரவெட்டி வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. மணிவண்ணனும் மேற்கொண்டு வருகின்றனர் 82)

## அகதி முகாமில் தீ விபத்து

மன்னாரில் அகதிகள் தங்கியிருந்த கிராமமொன்றில் கடந்த ஞாயிற்றுக் கிழமை தீ விபத்து ஏற்பட்டதாக மன்னார் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது-

அகதிகள் தங்கியுள்ள சரிவ் விலேஜ்ஜில் அகதிகள் தங்கியிருந்த பாரிய கொட்டகை ஒன்று பர்மமான முறையில் எரிந்துசாம்பராகியது என்றும் தெரிவிக்கப்படுகிறது-

சேத விபரம் குறித்த தகவல்கள் இதுவரை அறிவிக்கப் படவில்லை-

# பருத்தித்துறை உ. அ. பிரிவு; பதிவாளர்கள் அதிகரிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அடுத்த வருடம் தை மாதம் தொடக்கம் 14 பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர்கள் செயற்படவுள்ளனர்- 1000 குடும்பங்களுக்கு ஒரு பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்என்ற திட்டத்திற்கமைய தற்போது மூன்று பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் பிரிவாக உள்ள பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பதின்நான்கு பிறப்பு. இறப்பு, பதிவாளர் பிரிவுகளாக அதிகரிக்கப்படவுள்ளன. இது சம்பந்தமான கூட்டமொன்றுபருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்தில் பிரதேசச் செயலர் திரு. ச. முருகேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு ரீ. மாணிக்கவாசகரும் இக்கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தார்- கிராம சேவை அலுவலர்கள், பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலநது கொண்டனர்- (25)

## சுங்கவரி நீக்கம்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கைத்தொழில் பொருள்களை உற்பத்தி செய்வதற்கென இறக்குமதி செய்யப்படும் மூல பொருள்களுக்குசுங்கத்தீர்வை அறவிடுவதில்லை என்று அரசு தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது

---

# 5-ம் நாள் நினைவு அஞ்சலி

## தியோனிஸ் அலக்சான்டர்

சம்மாட்டியார்

பலாலி வடக்கைச் சேர்ந்தவரும் பிரபல தொழில் அதிபரும் அலக்சான்டர் அன் சன்ஸ் உரிமையாளருமாகிய தியோனிஸ் அலக்சான்டர் சம்மாட்டியார் அவர்கள் 24-08-1992 திங்கட்கிழமை காலமானார். இவர் விக்ரோறியாப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை (சம்மாட்டியார்) பாக்கியநாதர் (ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி) குணசீலியம்மா, பேரின்பநாதன் (சம்மாட்டியார்) காலம் சென்ற மரியாம்பிள்ளை ஆகியோரின் அருமைத் தந்தையும் சந்தியாப்பிள்ளை, திரேசம்மா, மேரியோசேப்பின் (ஆசிரியை காங்கேசன்துறை ம. வி) காலம் சென்ற அந்தோனிப்பிள்ளை, மோட்சலங்காரம், திரேசம்மா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலம் சென்ற இராசேந்திரம், காலம் சென்ற மரியம்மா, காலம் சென்ற ஆகத்தம்மா, காலம் சென்ற இராக்கினியம்மா, மரிசலீன், கென்றி, காலம் சென்ற அந்தோனியாப்பிள்ளை ஆகியோரின் பிரிய சகோதரருமாவார். இவரது பூதவுடல் 25-08-1992 செவ்வாய்க்கிழமை மாலை 3. 30 மணிக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டு புனித தோமையார் தேவாலயத்தில் நிறைவேற்றப்பட்ட திருப்பலிப் பூசையின் பின் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரது நினைவாக இன்று வெள்ளிக்கிழமை இவரது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்,
அ. பேரின்பநாதன் (மகன்)

முனை,
பருத்தித்துறை (3092)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

## ஆண்டு ஒன்றாகியும் அலைமோதும் நினைவுகள்

எங்கள் மைந்தனா[illegible] 24 — 01 — 1977



செங்கள மாவீரனாய் 09 — 09 — 1991

## 2-ம் லெப்டினன்ட் நேசன்

[சிவனேசன் - சிவசங்கர்]

ஈழமண்ணின் அன்பினிலே
ஈர்த்தனையோ நேசா,
மணலாற்றுப் பகுதியிலே அன்று நீ
வீரச்சமர் புரிகையிலே - தமிழ்
மண்ணுக்கே இன்னுயிர் நீத்தாய்,
மாறாது எம் நேசம் மாறாது எம் துயரம்
மறு அவதாரம் எடுத்திடு எம் செல்வமே
தமிழ் ஈழத்தின் வேங்கையாய்

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.
(சி-4947)

உன்பிரிவால் துயருறும்
பெற்றோர்,
சகோதரர்.

---

# நினைவு கூருகின்றோம்...

## 1992 - 08 - 28

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு, ஒட்டமாவடிப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவல் படையினரால் தாக்கப்பட்டு, பின்னர், உயிரோடு தீ மூட்டிக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு இறால் குழியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

**வி என். பீல்ட்/ரவி** (மாணிக்கராசா முரளிதரன்- ஆலங்கேணி)

1989ஆம் ஆண்டு மணலாற்றில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். கிருஸ்ணா** (சுப்பையா இராசதுரை - மடுக்குளம், பூவரசங்குளம், வவுனியா)

மணலாறு - அளம்பில் வீதியில், இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டும் காணாமலும் போன பல தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு அம்பாறை - வட்டமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**செல்வன்** (காரைதீவு, அம்பாறை)

**கபில்** (கல்லடி, மட்டக்களப்பு)

**மேகராசா** (கோளாவில், அக்கரைப்பற்று அம்பாறை)

மட்டக்களப்பு - வந்தாறு மூலைப்பகுதியில், சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**சின்னவன்** (வேலுப்பிள்ளை தேவநாயகம் - களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - டோறிக் குடாப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில்வீரச்சாவெய்திய-

**அன்பு**

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண் உட்பட சில தமிழர்கள்.

மட்டக்களப்பு-வந்தாறு மூலைப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சில தமிழர்கள் - தாளங்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன் - சோனகன் வெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட இளம் பெண், இளைஞன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 - தமிழர்கள் கரடியனாறு, கித்துள், மாவினையாறு இராஜபுரம் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 4 தமிழர்கள் - சித்தாண்டிப் பகுதி[illegible] சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தமிழ் விவசாயி யாழ். நெல்லியடி அச்சுவேலி வடக்குப்பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பெண்கள் - கரவெட்டியைச் சேர்ந்த சிறுவன் - முகமாலையைச் சேர்ந்த இளைஞன் - அல்வாய் மேற்கைச் சேர்ந்தோர் உட்பட 12 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு திருக்கோணமலை வேப்பங்குளம் முகாமிலிருந்து வெளியேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினரை பன்குளம் பகுதியில் வைத்து வழி மடக்கி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**லெப். சிறிநாத்** (மயில்வாகனம் திருச்செல்வம்-592, செல்வநாயகபுரம், உப்புவெளி, திருக்கோணமலை)

**2-ம் லெப்.பீற்றர்** [ஆறுமுகம் பகவத்சிங் - 4 - ம் கண்டம், பன்குளம், திருக்கோணமலை]

**சுதா** (செபமாலை பீரிஸ் ஜெகதீஸ்வரன் - கன்னியா, திருக்கோணமலை)

**சிறிமனோ** [கணபதிப்பிள்ளை ராஜன் - 319/91, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை]

தமிழீழக்கடற்பரப்பில் [பருத்தித்துறை] சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கடற்றொழிலாளியான தமிழ் இளைஞன்.

ஆகியோரை [illegible]ந்நாளில்
நினைவு கூரு[illegible]ன்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4948)

மாநகர மன்றம் யாழ்ப்பாணம்




தமிழீழ விடுதலைப் புலிகளின் 10 வது பயிற்சி முகாமின் (தமிழகத்தில்) பயிற்சியாளர்களிடையே சோமேஸ் தான் கதாநாயகன். அவனைச் சுற்றி எப்போதும் ஒருகூட்டம் காணப்படும். பயிற்சி முகாமுக்கு புதிதாக வரும் உறுப்பினர்களென்றாலும் சரி பயிற்சி பெற்ற மூத்த உறுப்பினர்களென்றாலும்சரி, அல்லது பயிற்சி முகாமைப் பார்வையிடவந்த வெளியார்கள் எனறாலும் சரி, ஒவ்வொருவருக்கு மேற்றமாதிரிக் கதைத்து இவன் முழுத்தகவல்களையும் திரட்டி விடுவான். அதேவேளை அங்குள்ள நடைமுறைகள் பற்றியும் அவர்களுக்கு விளக்கமளித்து விடுவான் அங்குவருபவர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் இவன் தான் தொடர்புப் பாலமாக விளங்குவான். ஏனெனில் பயிற்சி எடுக்கும் போது பயிற்சியாளர்கள் தேவையற்ற விதத்தில் எவருடனும் கதைக்க இயலாது, இதைவிட ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திலிருந்து வந்திருப்பவர்கள், ஒருவரையொருவர் அறிமுகமில்லாதிருப்பார்கள், ஆதலால் கதைக்கத் தயங்குவார்கள். ஆனால் சோமேசைப் பொறுத்தவரை அதெல்லாம் கிடையாது. பழகும் விதத்தினால் அவன் எல்லோருக்கும் பிடித்தவனாகிவிடுவான். அதனால் அவன் கேட்கும் கேள்விகளுக்கு அவர்களால் பதில் சொல்லாமலிருக்க முடியாது.

சாப்பாட்டு நேரத்தில் இவனிடம் தான் மற்றைய பயிற்சியாளர்கள் விளக்கம் கேட்பார்கள். அவர்களுக்கு விளங்காதவற்றையும் மேலதிகவிபரத்தையும் இவன்தான் விபரமாகப் புரியவைப்பான். அனைவரும்கூட்டமாக அமர்ந்திருக்க நடுநாயகமாக சோமேஸ் உட்காந்திருப்பான் பகிடிவிட்டபடி சுற்றிவர எல்லோரையும் அவதானித்துக்கொண்டே சாப்பாட்டைக் குழைப்பான். பின் கதைத்துக் கதைத்து குழைத்த சாப்பாட்டைக் கொடுப்பான். அதே முகாமில் சமைத்த சாப்பாடு தான்- தனியாக இருந்து இதைச் சாப்பிடும் போது இது பயிற்சிக்காலச் சாப்பாடு என்ற உணர்விருக்கும். ஆனால் சோமேஸ் கொடுக்கும் போதுமட்டும் அது அமிர்தமாக இருக்கும். வீட்டில் சகோதரர்களுடன் கூட இருந்து அம்மா குழைத்துக் கொடுக்கச்சாப்பிடுவது போல இருக்கும். புதிதாக வருபவர்கள் கூச்சத்தினால் சாப்பிட மறுத்தால் இவன் ''நீ சாப்பிடாட்டி நானும் சாப்பிட மாட்டேன்'' என்று அடம் பிடித்து சாப்பிட வைப்பான் அடுத்தநாள் அவர்கள் தாங்களாகவே சோமேஸ் முன் ஆஜராகிவிடுவார்கள்

பயிற்சியின் போது களைத்துப்போய் மைதானத்தை விட்டு வருபவர்களுக்கெல்லாம் சோமேசைக் கண்டவுடன் அக்களைப்பு பறந்து போய்விடும். இவனது பகிடிகளையும், கதைகளையும் கேட்க புது உற்சாகம் பிறந்து விடும் பயிற்சி முடிந்ததும் அந்தமுகாமின் முதல் பொறுப்பாளர்கள் முதல் அனைவரிடமும் ஒரே கேள்வியைத் தான் கேட்டார்கள் பயிற்சியாளர்கள். 'சோமேஸ் எங்கை போறான்''- எல்லோருக்கும் தாங்கள் போகுமிடத்துக்கே சோமேசும் வரவேண்டும் என்று ஒரு ஆசை. அவனிருந்தால் தான் எப்போதும் தாங்கள் உற்சாகமாக இருக்கமுடியும் என்று நம்பினார்கள்.

ஒவ்வொரு பணிகள் கருதி முகாமிலிருந்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படும் போராளிகளை கைகளால் கட்டிப்பிடித்து கண்கள் கலங்க அனுப்பிய இவன் தானும் அவ்வாறு பிரிந்து சென்றான். அந்தக் காட்சிகள் அவனுடன் பழகிய எவராலும் மறக்க முடியாதவை

எல்லோரிடம் பழகும்விதம், விளக்கமளிக்கும் ஆற்றல் இவற்றைக் கருத்தில்கொண்டு இவன் கோயம்புத்தூர் பகுதியில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பணிகளை மேற்கொள்வதற்கென தெரிவு செய்யப்பட்டான்.

மாணவர் இயக்கப் பணிகளை இவன் சிறப்பாக மேற்கொண்டான். அக்காலத்தில் இவனுடன் பழகிய கோயம்புத்தூர் மக்கள் என்றும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாளர்களாகவே விளங்குவர். எந்தத் தடைகளும் அவர்களின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது, ஏனெனில் ஒரு போராளி எத்தகைய உயர்ந்தகுணத்தைக் கொண்டிருப்பான். இந்தப் போராட்டம் எத்தனை உயரிய தியாகங்களினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பதையெல்லாம் சோமேசுடன் பழகியும், அவன் சொல்லக் கேட்டும் உணர்ந்திருக்கிறார்கள் அவர்கள்.

எதைத்தான் செய்தாலும் இவனுக்கு தன் சொந்த மண்ணில் இருந்து போராட வேண்டும் என்பது தான் ஆசை. தாயகத்தைப் பற்றி வரும் செய்திகள் தொடர்ந்து அங்கேயிருக்க முடியாத மனநிலையைத் தோற்றுவித்தன. அதனால் ''நாட்டுக்குப் போக வேணும்'' என்று வற்புறுத்திக்



லெப். சோமேஸ்

கொண்டேயிருந்தான். மாணவர் இயக்கப் பணிகளை செய்வதற்கு இவன் தான் பொருத்தமான ஆள், ஆனாலும் இவனது நச்சரிப்புத் தாங்காமல் தமிழீழத்துக்கு அனுப்பும் பொருட்டு தமிழகக்கரையில் இருந்த முகாமுக்கு அனுப்பப்பட்டான் அங்கு சில காலம் பணியாற்றிய பின்னரே இவனுக்கு தாயக மண்ணை மிதிக்கும் பாக்கியம் கிடைத்தது

அந்தக் காலத்தில் சிறிலங்காப்படை இவனது சொந்தக் கிராமமான பலாலிப் பகுதி முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது. கள்ளக்குடியேற்றக் காரர்களை தடுக்கவென்று அமைக்கப்பட்ட இராணுவ முகாமினால் அந்தமண்ணின் பூர்வீகக்குடிமக்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இவன் இப்பகுதியைச் சேர்ந்தவனென்பதாலும், அப்பகுதியை நன்கறிந்தவன் என்பதாலும் அப்பகுதியை வேவுபார்க்கும் குழுவில் இணைக்கப்பட்டான்தான் மழலையாய்நடைபயின்ற மண்ணில், உருண்டு புரண்டு விளையாடிய மண்ணில் இன்று ஒளித்து ஒளித்துப் போய் வேவு பார்க்கும் நிலை வந்துவிட்டதே என்று வருந்தினான். ஆனாலும் வரலாறு தனக்கு இட்டபணிகளைச் செய்யும் மனத்திருப்தி இவனுக்கு இருந்தது.

கட்டுவன் காவலரணில் இவன் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், 21-5-87 அன்று சிறிலங்காப் படையினருடனான மோதலில் காயமடைந்தான். காலில் காயமடைந்து யாழ் வைத்திய சாலையில் இருக்கும் போது இவனுடைய அன்னை இவனைப் பார்க்க வந்தார். தான் முத்தமிட்டு வளர்த்த அந்தக் கால்கள்கட்டிலில்காயத்துடன் ஓய்வெடுப்பதைக் கண்டதும் துக்கம்தாளவில்லை. அதனால் ''தம்பி நீ இவ்வளவு காலமும் இயக்கத்துக்கு வேலை செய்தது போதும்; இனி வீட்டை வா உனக்குஏழுபொம்பிளைச் சகோதரங்கள் இருக்கெல்லே அதுகளுக்கெல்லாம் உழைக்க வேணும் தானை-வீட்ட வா'' என்று கேட்டார் அவ்வளவு தான் இவன் சீறியெழுந்தான். தான் இருக்குமிடம் வைத்திய சாலை என்பதையும் மறந்தான், ''எல்லாத் தாய்மாரும் சண்டைக்குப் போ எண்டு பிள்ளைகளை அனுப்புறநேரத்தில நீ வீட்டவரச் சொல்லியோ கேக்கிறாய்? நீயும் ஒரு தாயே? எங்கட இடமெல்லாம் ஆமிக்காரன் பிடிச்சு வைச்சிருக்கிறான், இநதநேரத்தில வீட்டை வரச் சொல்லிக் கேக்கிறாய், இஞ்சையிருந்துபோ-இனிமேல் இதைப்பற்றிக்கதைச்சா நான் வீட்டையே வரமாட்டன்'' என்று கத்தினான் வேதனையுடன் தாய் அங்கிருந்து நகர்ந்தார்.

பெற்றதாயை இப்படிஅவன் ஏசியதற்கு சில காரணங்கள் இருந்தன. முதலாவது இவன் காயப்படுவதற்கு முதல் நாள் தான் யாழ் மாவட்டத்தளபதியாக இருந்த ராதா சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்தியிருந்தார் - அதுவும் இவன் காயப்பட்ட அதே கட்டுவன் பகுதியில்-ஒருதாயைப்போன்ற கவனிப்புடன் அவனைநேசித்த ராதாவை இழந்த ஆத்திரம் அவனுள் குமுறிக்கொண்டிருந்தது ராதாவை இழந்த சோகத்தில் இருக்கையில் தனது தாயார் வந்து இப்படிக் கேட்டதை அவனால் பொறுக்க முடியவில்லை. அடுத்தது அவனுடைய காயத்தின்வேதனை, இவையிரண்டும் இல்லாவிட்டால் இவன் தனது வழமையான பாணியிலேயே சிரித்துக் கதைத்து தனது மறுப்பைத் தெரிவித்திருப்பான் ஏழ்மையான குடும்பச்சூழ்நிலை ஏழு சகோதரிகள் குடும்பத்தின்மீது அவனுக்குப் பாசமிருந்தது தான் ஆனாலும் அதைவிட தேசத்தின் மீதிருந்த பாசம் கூடுதலாக இருந்தது

இந்திய இராணுவத்துடனான போர் ஆரம்பித்ததும் இவனுக்கு ஜீ-பி-எம் ஜீ யுடன் நின்று போரிடும் சந்தர்ப்பம் கிடைத்தது; குளப்பிட்டி,வட்டுக்கோட்டை, ஏழாலை போன்ற இடங்களில்இந்தியப் படையினர் இவனது அணியிடம் பேரிழப்பைச் சந்தித்தனர்-

இறுதியாக 04-08-1988 இல் நித்திகைக் குளத்தில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் இவன் வீரச்சாவெய்தினான்-நித்திகைக்குளத்தில் இருந்தஎமது முகாமொன்றைக் கைப்பற்றிய இந்திய இராணுவம் அங்கிருந்து தாம் புறப்பட்ட முகாமுக்கு திரும்பிச் சென்றது இவ்வாறு திரும்பிச் செல்லும் வழியில் அவர்களுக்கு விழுந்த அடி மீண்டும் அதே முகாமுக்குத்தான் வழி காட்டியது அதனால் திரும்ப அங்கேபோய் நின்று கொண்டு தமது அடுத்தகட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானித்தனர்- இந்நிலையில் ''நீ போனாலும் அடிப்போம்,வந்தாலும் அடிப்போம்'' என்று இந்திய இராணுவத்தினருக்கு படிப்பிப்பதற்காக அந்த முகாம் மீது தாக்குதல் நடத்தத் தீர்மானித்தான் சோமேஸ்- மிகவும் கிட்டிய தூரத்தில் தான் நின்று நடத்தப்போகும் அந்தத் தாக்குதல் எப்படி நடக்கப்போகின்றது என்பது அவனது மனத்திரையில்தெரிந்தது-அதனால் 10 கைக்குண்டுகளுடனேசென்றான்-அங்கிருந்த தனதுஅயற் கிராமத்தவனாகிய நெடுமாறனிடம் ''இந்தச் சண்டையில நான் செத்தா வீட்டுக்காரருக்குஅறிவிச்சிடடாப்பா; அவை இப்ப இடம் பெயர்ந்து விசுவமடுவில தான்இருக்கினம்; அது உனக்குத் தெரியும் தானை?'' என்றுகேட்டான்-அவன்திட்டமிட்டபடியே சண்டைமிக மூர்க்கமாக நடைபெற்றது- 10 கைக்குண்டுகளும்முடிந்தநிலையில் திரும்பிவந்து மீண்டும்பல கைக்குண்டுகளை எடுத்துக் கொண்டு போய்ப் போரிட்டான் சோமேஸ்-அந்தத் தாக்குதலில் எஸ்-எல் ஆர், பிறன் எல்-எம்-ஜி சுடுகுழல், ரவைகள் இப்படியாக பல ஆயுதங்கள் எமக்கு கிடைத்தன- ஆனால் நாம் சோமேசை இழந்து போனோம்-

பொது அறிவு சம்பந்தமான விடயங்களில சந்தேகம் ஏற்படும்போது எமக்கு விளக்கமளிக்கும் சோமேஸ்- எவர் தவறு விட்டாலும் நக்கீரன் பாணியில் அதே சமயம் அவர்களதுமனம்கோணாமல்நகைச்சுவையாகவே அத்தவறைச் சுட்டிக்காட்டும் சோமேஸ்- போராளிகளின் எந்தப் பிரச்சினையானாலும் தனக்கு அப்பால் போகாத நிலையில் தீர்த்து வைக்கும் சோமேஸ்-அந்த 10 ஆவது முகாமின் கதாநாயகன் சோமேஸ்- கோயம்புத்தூர் மக்களின் மனதில் என்றும்நிறைந்திருக்கும் சோமேஸ் இன்று இல்லை என்னும்போது எம்மால் நம்ப முடியாமல் இருக்கிறது-

இவனை நினைக்கும் போது மிக முக்கிய சம்பவமொன்று நினைவுக்கு வருகிறது இந்தியப்படையுடன் போர் தொடங்கிய பின்னர் ஒவ்வொரு இடமாக இந்தியப் படை பிடித்து வந்தது நாம் யாழ் மாவட்டத்தை விட்டு வன்னிக்காடுகளுக்கு போயிருந்தோம்- தொடர்ச்சியான போர் களைப்பையும் ஏற்படுத்தியிருந்த வேளை அது அடுத்து என்னென்ன நடக்குமோ என்ற நிலை- இதைப் பற்றி பலரும் பலவிதமாகக் கதைத்துக் கொண்டிருந்தனர்- அப்போது சோமேஸ் சொன்னான் -''இனித் தான் இந்தியன் ஆமி வாங்கப் போறான் எப்படிக் காடு இருக்குதெண்டு படிக்கப் போறான்- நாங்கள் இவனுக்குப்படிப்பிச்சுக்காட்டுவம்''- சோமேஸ் சொன்ன பாணி அனைவருக்கும் புது உற்சாகத்தை ஊட்டியது- உறுதியுடன் தோள்களில் ஆயுதங்களை மாட்டிக் கொண்டனர்-

சோமேஸ் சொன்னது போலவே இந்திய இராணுவம் தமிழீழக் காடு எப்படி இருக்கின்றது என்பதை படித்தது- அதற்காக நிறைய விலை கொடுத்தது-

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டகன்றதும் காட்டுக்குள்ளிருந்து மீண்டும் யாழ் குடாவை நோக்கி வந்தோம்- வரும் வழியில் இவன் ''இந்தியன் ஆமி இனித்தான் வாங்கப்போறான்''என்றுகூறி எமக்கு உற்சாகமூட்டிய இடத்தைக் கண்டோம்- அன்றைய காட்சியை நினைக்கும் போது நெஞ்சுகனத்தது- அந்த இனிமை இனி இல்லைத் தான்- ஆனால் நாம சோர்வாக இருப்பது அவனுக்குப் பிடிக்காது- அதனால் மீண்டும் எமது துப்பாக்கியைச் சரி பார்த்தபடி வண்டியில் ஏறினோம்- அவன் பிறந்த இடமான பலாலியைப் பார்க்க வேண்டும் என்ற அவசரத்துடன். இப்போது அவன் தனது தாய்க்கு கூறிய வாசகம் நினைவுக்குவருகிறது- 'இது எல்லாத் தாய்மாரும் சண்டைக்குப் போ எண்டு பிள்ளைகளை அனுப்புறநேரம்''-

ஆ- செந்தாளன்

## செய்தியும்......

'உலகிலேயே அதிகமழை பெய்யும் இடம் எது' என்று அந்தக் காலத்தில் பூகோளத்தில் ஒரு கேள்வி வரும்- எல்லா மாணவர்களுக்கும் தெரியும் அது- 'அஸ்ஸாமிலுள்ள சிரபுஞ்சி' என்று- இப்போது அந்த சிரபுஞ்சி மேகாலயா மாநிலத்தில் உள்ளது- அங்கு "கடுமையான தண்ணீர்ப் பஞ்சம், அருவிகள் வற்றிக் கொண்டு வருகின்றன" என்று சண்டே பத்திரிகை தெரிவிக்கின்றது- ''காரணம் அங்குள்ள மரங்கள் எல்லாம் கேட்பாரற்று வெட்டப்படுகின்றன- பெய்கின்ற மழை பூமியில் தங்காமலும் மேல் மண்ணை அடித்துக்கொண்டும் போய்விடுவதால் சிரபுஞ்சி பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கிறது" என்று புவியியல் துறைத்தலைவர் பி கே-துகாராய் அறிவித்தார்-பாலைவனத்தை எல்லாம் பசுஞ்சோலையாக மாற்றிய மனிதகுலம் எங்கே இப்போது பாலைவனத்தை உருவாக்கும் மனிதனின் தன்நலம் எங்கே..?

## சாரமும்......

பொறுப்பு என்பது நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு பொருள். அது அண்மையிலுள்ள ஒரு மனிதனாக இருக்கலாம்; ஒரு பலவீனமானவனாக இருக்கலாம்; ஒரு சித்தபிரமை பிடித்தவனாக இருக்கலாம் அது நாம் தெரிந்துகொண்ட ஒரு உண்மையாக இருக்கலாம் அல்லது நீர்ப்பரப்பாக இருக்கலாம் அல்லது ஒருவனுடைய சரித்திரமாக இருக்கலாம்- எது நம்மிடம் ஒப்படைக்கப்படுகிறதோ அதனால் எவ்விதமான சோதனைகள் ஏற்பட்டாலும் அதற்கான முழுப்பொறுப்பையும் நாம் ஏற்க வேண்டும்-

— ஜெர்மன் நாடகாசிரியர்,
ஸீக்ஃபரீட் லென்ஸ்

# மற்றுமொரு பெற்றவள்

## சிறுகதை

**செ. பொ- சிவநேசன்**

சில நாட்களாய்த் தர்மசீலனுள் சஞ்சலம் இரண்டில் ஒன்றென நிலைக்க மறுக்கிறது மனமுள் படிப்பவை, கேட்பவை, கண்முன், நடப்பவை சுதந்திரம் பற்றித் தூண்டின. நன்றாகவே உணர்ந்தான். எதிரியிடந்தான் எத்தனை வேகம்? அம்மா மட்டுந்தானா அம்மா? இந்த மண்ணுந்தான்! அம்மாவுக்கு அம்மா ... ... அம்மாவின் அம்மாவுக்கும் அம்மா... ஆழ்ந்து நினைத்த அன்னை நிலம்! கபளீகரஞ் செய்துவிட அந்நியனிடந்தான் எவ்வித கங்கணம்? ஒதுங்கியே இருப்பதா?... இழந்து விட்டு எங்குதான் போவது? எருமையாய் அசைவற்று அதுகூட மட்டுக்குத் தானே? தன் இறமையில் மாற்றொரு கை விழுவது அளவு மீறட்டுமே, திமிறிக் கொண்டல்லவோ வந்து விடுகிறது மல்லுக்கு?... போராட்டம்! .... போராடித்தான் ஆகவேண்டும்! ஆனால் அம்மா? ... பெற்றெடுத்த அம்மா?... அம்மாவா? அன்புச்சமுத்திரம்! மூழ்கித் திளைப்பது இகலோகத்திலேயே கிடைக்கிறமுத்திநிலை வேறேது மனிதனுக்கு முத்தி நிலை? வலிய சிறையை உடைக்கத் தெரிந்த குற்றவாளியும் முயலட்டும், தாயின் அரவணைப்பை உடைக்கிற திராணி வராது. சிறையளவுக்கு வல்லமையில்லை. மென்மை, பூவிதழ் என்ன மென்மை? ஆனாலும் வராது! முடியுமா அம்மாவைப் பிரிந்து போக?

சிலரைப் போல் பேடிமை இல்லை, சோம்பல் இல்லை. பெருந்தன்மை இந்தப் பாசந்தான். உண்மையிலேயே அவனிற்கு விளங்கியது. தாயகத்தை நேசிக்க மாட்டாதவன். தாயிடம் பாசமிருப்ப தாய்ச் சொல்வது போலித்தனம், பம்மாத்து ஆனால், நடைமுறைக்குச் சிக்கலாய்த் தோன்றியது. போராட வென்று திடம் எழும் மறுநொடியே அம்மா! ஏக்கமுற்று, வற்றிப்போன அம்மாவின் முகம் பளீரென்று தோன்றும். துன்பியல் ஓவியமாய் மனவெளியில் பாதிப்பாகும். சொல்லாமற் பிரிந்த பிள்ளையைத் தேடி எங்கெல்லாம் அலைவாளோ? என்ன பாடு படுவாளோ? எவ்விதமாய் உருக்குலைந்து போவாளோ?

சில சமயங்களில் வேறுவிதமாயும் எண்ணங் கொள்வதுண்டு. எனக்குள்ளும் கோழைத்தனம், சோம்பல் உறைந்து கிடக்கிறதோ? எனது மனச்சான்றுக்கே மூடி மறைக்க முயல்கிறேனோ? அதற்காகக் கூறிக்கொள்கிற சமாதானந்தானோ அம்மா? ச்சா, இருக்காது பிறகேன் போராடுகிற வேகம் வரப்போகிறது? பாசந்தான்!... ஆ... இந்த அம்மா இப்படி வளர்த்திருக்கக் கூடாது! குஞ்சுகளைச் சிறகுக்குள் அரவணைப்பது போல, மடிக்குள் கட்டிக் கட்டி ... கூடவே கூடாது: விரட்டித் தள்ளியிருக்க வேண்டும், அன்பைச் சொரிந்திருக்கவே கூடாது. எத்தனை சுதந்திரமாய்க் கிளம்பியிருக்கலாம் ஐயோ, மடச்சாம்பிராணியாக இருந்திருக்கலாமே! உலகத்தைப் பற்றியே கவலை இல்லாமல் சிவன் போக்கு சித்தன் போக்கென்று... ச்சீ, சிந்தனையே இல்லாமலா? அதுக்கு மனிதப்பிறவியா தேவை? மாடாய், மரமாய்ப் பிறப்பது காணுமே

அவனது அகம் புறத்தைச் சிதைத்து வந்தது. மாலை வேளை மல்லிகையாய்ச் சோபையிழந்து போயிற்று முகம் கால்களுந்தான் ஏதோ இருக்கின்றன, நடந்தான், தளர்வு நெஞ்சே வெறுத்தது அறுத்தெறியத் தோன்றுமளவிற்கு.

- 2 -

ஊர்க்காற்றில் ஒரு சேதி: 'சிவமூர்த்தி செத்துப் போச்சாம்!''

கேட்டோர் அதிர்ந்தனர். இந்த இளம் வயதில்?....

''என்ன மாதிரியாம்?''

''பொம்பர் அடியில.''

அவனது தெரு தான் சிவமூர்த்திக்கும் நம்பவே முடியவில்லை. சிலமணிநேரத்திற்கு முன் தான் வழியில் எதிர்ப்பட்டவன், அவனிற்கும் பயணஞ் சொன்னவன்... இப்போது...

எங்கோ ஒரு திசையில் போய்க் கொண்டிருந்தவன். ஏதோ திசையில் திருப்பப்பட்டு, எப்வடியோ...

நாட்டுப் பற்று அவனுள்ளும் தளிர் விட்டிருந்தது. போராளிகளுடன் நெருங்கினான். உதவி, ஒத்தாசைகள் நிறையவே வழங்கினான். ஒரு சில புண்ணியவாளர் ஓடிவந்தனர். அப்பாவின் காதைக் கடித்தனர். ''அலட்சியமா இருக்கிறியளே! சும்மா உதவிதானே யெண்டு எண்ணாதேங்கோ! பிறகு ஒரேயடியாகவேசேந்திடுவான்!''

அப்பா அழைத்து வைத்துச் சொல்லிப் பார்த்தார். அம்மாவின் உதவியைத்தான் நாட வேண்டியிருந்தது. அப்பாக்கள் கெட்டிக்காரர்கள், அம்மாக்களின் பலவீனங்களைப் புரிந்து வைப்பதில், தமக்கிசைவாய் வளைத்து, நிமிர்த்திக் கொள்வதில் ஒரு நாளிற்குள் அம்மாவைத் தயாரித்து விட்டார்.

வழமை போலவே இருண்ட பொழுதைப் பிளந்தபடி வீடு வந்தான். அம்மாவிடம் மாலை மாலையாய்க் கண்ணீர். ''நீ செய்யிறது சரியே ராசா? வீட்டுக்க இருக்கிற குமருகளைக் கொஞ்சமாகிலும் யோசிச்சுப் பாத்தியே? அப்பாவாலும் இனி ஏலாது. உன்ன நம்பித் தானே இருக்கிறம்!...''

பெற்றவர்களிற்கு உறவினர்களும் கைகொடுத்தனர். சித்தப்பா, மாமி, பெரியண்ணி... மறுநாள் காலையில் ஒரு கூட்டம். பெயர் பெற்ற சலவை நிலையங்கள் தோற்றன. மூளைச்சலவை பேச்சினிடையே பெரும்பாலும் அடிபட்டது. 'வெளிநாடு' ஈற்றில் வெற்றிதான். ஐரோப்பிய குளிர்பதனத்தை மெய்யுணர்வால் அறிய ஒப்புதல் தந்து விட்டான்.

— 3 —

காலையில் முதன்மைத் தெருவிற்கு வந்தான் தர்மசீலன். நாளாந்த வழமை. தேநீர்க்கடைக்குள் மிதிவண்டி ஒன்று தலைகீழாய்க் கிடந்தது வழமைதான்- 'சின்னவன்' என்கிற சிறுவன் சுழற்றிக் கொண்டிருந்தான். மின்னுற்பத்தியாக்கி (டைனமோ) தொப்பூழ்க்கொடி வழியே வானொலிப் பெட்டிக்கு ஊட்டம் கொடுத்துக் கொண்டிருந்தது. இவன் விழிகள் மேசையை மேய்ந்தன-

''வாங்கோ அண்ண! என்ன பேப்பரே பாக்கிறியள்? தவமண்ண இப்பான் போறார் எடுக்க- இருங்கோ வந்திடுவார்.''

இருந்தான்- 'செய்திகள் ..' உன்னிப்பைஈர்த்தது-வானொலிப் பெட்டிக்கு அண்மையாய் நாற்காலியை நகர்த்தினான்- ''...நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் கோண்டாவில் என்ற இடத்தில் தமிழ்ப் பயங்கரவாதிகளின் ஆறு முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டன- சிறிலங்கா பாதுகாப்புப்படையைச் சேர்ந்த விமானங்கள் மேற்கொண்ட இத்தாக்குதலில் நான்கு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்..''

அவனுள் ஏளனமும், ஆத்திரமும் கலந்து கிளர்ந்தது- பயங்கரவாதிகளின் முகாமாம்! பாவம் அப்பாவிகளின் வீடுகள்! நான்கு பயங்கரவாதிகளும் யார்? வெளிநரடு போக வெளிக்கிட்ட சிவமூர்த்தி- தன் காரியமாக தெருவில் போய்க் கொண்டிருந்தவன், மற்றது அரிசி வாங்கக் கடைக்குப் போன சிறுமி, கோவிலுக்குப் போய்க் கொண்டிருந்த ஐயர், ஒரு பிச்சைக்காரக் கிழவன்... நல்லவேளை வீட்டுக்கொரு பாதுகாப்பகழிகள் இருந்தன- இன்னும் பத்து இருபது அப்பாவிகளாவது ''லங்கா புவத் திடம் பயங்கரவாதிகள்'' விருது பெற்றிருப்பார்கள்!

— 4 —

பத்திரிகை வந்தது- இதற்கிடையில் அவனது மனம் தளும்பத் தொடங்கியிருந்தது சிவமூர்த்தி.. அவன்... அந்த அனர்த்தத்திலிருந்து தப்பியிருக்க முடிந்தால்... கொழும்பு... பிறகு எப்படியோ, வெளிநாடு நல்ல பாதுகாப்பாய் இருந்திருப்பான்...பாவம் பிழைத்துப் போய்விட்டது-

தலைப்புத் தலைப்பாய் விழிகள் ஓடின. உள்ளே ஓங்கி உதைத்தது ஓர் தலைப்பு-'' ஜேர்மனியில் நாஜிகளின் இனவெறி - வெளிநாட்டார் குடியிருப்புகள் மீது தாக்குதல்'' ஆங்... பாதுகாப்பா?... வெளிநாட்டிலுங் கூட

''என்ன தவத்தார்! எங்கட ஆக்கள் சிலபேர் தஞ்சம்கேட்டு வெளிநாடுகளுக் ஓடிச்சினம். இப்ப அதுவும் பொய்ச்சுப் போச்சே?''

''ஏன்? என்ன சங்கதி?''

''அங்கயும் பெரிய அவலமாம், எங்கட ஆக்களுக்கு ''

''எது, ஜேர்மனியில நடந்ததச் சொல்லுகிறீரே? அதுதான். ஒருவழியிலும் நாங்கள் தப்பேலாது போனகிழமையும் ஒரு செய்தி இருந்தது: லண்டனில நிறவெறிக் கும்பலொண்டு எங்கட பெடியன் ஒண்ட கத்தியல குத்திச் சாக்காட்டிப் போட்டாங்களாம் என்னஇருந்தாலும் எங்கட நாடு தான் எங்களுக்குப் பாதுகாப்பு. பச்சத்தண்ணியக் குடிச்சாலும் சொந்த மண்ணப்போல வருமே?.. வாங்கோ செல்லையாண்ண! என்ன வேணும்?''

''ஒரு சீவல் வெத்தில தாரும்! .. இப்ப நீர் சொன்னது ஞாயந்தான்- எங்கட மண்ணெண்டாப்போல என்ன? சீவிக்கக் கூடிய நிலைமையிலயே இருக்கிறம்?''

''அந்த நிலைமைய நாங்கள் தானே அண்ண உருவாக்க வேணும்'' தர்மசீலன்- ''எங்கட மண்ணில பாதுகாப்புத் தேடேலாத நாங்கள் என்னெண்டு வெளிநாட்டில தேடேலும்? அதில என்ன அர்த்தமிருக்கு? அங்க புாக்கலயே; இந்தியாவான இந்தியாவிலேயே எங்கட ஆக்கள் படுகிற கேவலத்த?''?

—5—

சொன்னது யாருக்கு? செல்லையருக்கா? எனது தன்னிலைக்கே தானா? - வீட்டினதுள் இறுகிக் கிடந்தது உடல் மட்டுந்தான்- உள்ளமோ இயங்கியபடி- சொல்லியாயிற்று: ''சொந்த மண்ணில் தேடவியலாத பாதுகாப்பு வேறு எந்த மண்ணில் கிடைக்கும்?'' சரிதான்; உண்மையுந்தான்- இங்கிருக்கிற நான்தான் என்னத்தைச் செய்துவிட்டேன்- 'அந்நிய மண் எங்களுக்கு மண் குதிரை' சொல்லிக் கொண்டே இருப்பதில் என்ன அர்த்தம்? என்ன பெருமை? சொந்த மண்ணைப் பேண சாதித்தது என்ன? பாதுகாப்பு . ஏன் தாய்க்கு? . சகோதரர்களுக்கு?

அவனது சஞ்சலம் அறுந்து நழுவியது- ஊசலாடிய மனமுள் ஒரு புள்ளியில் நிலைத்தது- கலங்கல் மேகங்கள் விலகி வெளித்தவானமென முகத்தில் மிளிர்வு-

★

# "மீனை நாம் விரயமாக்குகிறோம்"

**பேதுருப்பிள்ளை அருள்மரியதாஸ்**
கடற்றொழில் பரிசோதகர்

**புரத உணவிற்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இக்காலத்தில், மீனிலுள்ள சத்துக்களை முழுமையாகப் பெறுவதற்கு வழிகாட்டும் நோக்கத்துடன் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

புரத உணவைப்பெறுவதற்காக, நாம் மீனை வாங்குகிறோம்.ஆனால், மீனில் புரதச் சத்தைவிட கொழுப்பு,உயிர்ச் சத்து - ஏ என்பனவும் அதிகம் உள்ளன. மீனின் சதைப்பகுதிக்கே மதிப்பளிக்கும் நாம். அதன் தோல், தலை,எலும்பு, செட்டை, வால், ஈரல், மற்றும் உள்ளுறுப்புகளிலும் புரதம், கொழுப்பு, உயிர்ச்சத்து - ஏ என்பன இருப்பதை அறிவதில்லை.கறிசமைக்க முன்பு, மீனை வெட்டிச் சுத்தம் செய்யும் போது அதன் குடல் உட்பட, உள்ளுறுப்புக்கள் எல்லாவற்றையும் எறிந்து விடுவது எமது மக்களின் பழக்கம். நாம் எறிகின்ற அப்பகுதிகளிலே அதிக சத்துக்கள் உள்ளன. நாம் அதிக விலைகொடுத்து வாங்கும் மீனின் ஒரு பகுதியை மட்டும் பயன்படுத்தி விட்டு மிகுதியை எறிந்துவிடுகின்றோம்.

மீனின் சதைப்பகுதி, முழு மீனினதும் அரைப்பங்கிலும் குறைவானதே. எனவே அரைப்பங்கிற்குக் கூடுதலான பகுதியை வீணாக்குகிறோம். புரத உணவிற்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இக்காலத்தில் எமக்குக் கிடைக்கும் மீனின் முழுப்பயனையும் பெற முயற்சிக்க வேண்டும். குடல் உட்பட மீனின் உள்ளுறுப்புக்களைச் சுத்தம் செய்து கறியுடன் சேர்ப்பதன் மூலம் அதிக பலனைப் பெறலாம்.

**சாவாளை மீனின் பகுப்பாய்வின் போது பெறப்பட்ட பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன.**

| உறுப்பின் பெயர் | முழு மீனிலுள்ள பெறுமானத்திலிருந்து கணிக்கப்பட்ட குறிப்பிட்ட உறுப்பிலுள்ள நூற்று வீதம் | | |
|---|---|---|---|
| | கொழுப்பு | புரதம் | 100 கிராமிற்குரிய கலோரிப் பெறுமானம் |
| சதை | 1. 8 | 19. 8 | 96 |
| தோல் | 10. 00 | 19. 8 | 169 |
| தலை | 4. 0 | 16. 5 | 103 |
| எலும்பு, செட்டை வால் | 3. 6 | 15. 5 | 96 |
| ஈரல் | 6. 3 | 12. 8 | 109 |
| ஏனைய உள்ளுறுப்புக்கள் | 1. 5 | 14. 0 | 70 |

மேற்கூறிய தரவுகளிலிருந்து மீனிலுள்ள கொழுப்பு, புரதம், சக்தியின் அளவு ஆகியன சதையிலுள்ளதிலும் பார்க்க, ஏனைய உறுப்புகளில் கூடுதலாக உள்ளதை அறிகிறோம்: எனவே மீனின் முழுப்பயனையும் பெற அதன் எல்லாப் பகுதியையும் உண்ணப் பழகுவோமாக.

### உயிர்ச்சத்து – ஏ

இதுவரை காலமும் அகத்தியிலை, முருங்கையிலை ஆகியவை கண்பார்வைக்கு உகந்தவை என்று பத்திரிகைகளில் வாசித்தோம். ஆனால் மீனின் ஈரலிலும் கண்பார்வைக்கு உகந்த உயிர்ச்சத்து - ஏ அதிகம் உள்ளது.ஈரலில் உள்ள உயிர்ச்சத்து - ஏயின் அளவு ஒவ்வொரு வகை மீனிலும் வேறுபடுகின்றது. ஒரு கிராம் ஈரல் எண்ணெயில் உள்ள உயிர்ச்சத்து - ஏ யின் அளவு சூரைமீனில் 2000 சர்வதேச அலகும், வாளை மீனில் 3000 சர்வதேச அலகும், சாவாளை மீனில் 6000 சர்வதேசஅலகும் உள்ளமை பகுப்பாய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மக்கள் அதிகம் விரும்பாத, விலை குறைந்த சாவாளை மீனில் அதிகமான உயிர்ச்சத்து - ஏ இருப்பது ஆச்சரியமான விடயமே.

### வைரவரிகள்

யார் வேண்டுமானாலும் கோபம் கொள்ளலாம்- ஆனால், சரியானமனிதனிடம், சரியான அளவில்,சரியான நேரத்தில் சரியான காரணத்திற்காக, சரியான முறையில் கோபம் கொள்வது எளிதல்ல; இது எவருடைய ஆற்றலுக்கும் அப்பாற்பட்டது-

- அரிஸ்டாட்டில்

மரபில்லாத கலை, மேய்க்கும் இடையன் இல்லாத ஆட்டு மந்தையைப் போன்றது.

- சர்ச்சில்

# கொழும்பில் தத்துக்கள் மிகுந்த பத்திரிகைத் தொழில்

## நிலாந்தன்

காமினி நவரட்ண 'சற்றர்டே றிவியூவின்'' ஆசிரியராக இருந்தவர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஒரே ஆங்கில வாரப் பத்திரிகையான சற்றர்டே றிவியூ தமிழர் தரப்பு நியாயங்களை ஆங்கிலம் வாசிக்கும் சிங்களவர்களிற்கு முகத்திலறைந்தாற் போலச் சொன்னது. இதனால் ஜே.ஆர். அரசிற்கு சதா எரிச்சலூட்டுவதாகவும், சில சமயங்களில் உறுத்தலாகவும் அமைந்திருந்தது தனது அலட்சியம் கலந்த துணிச்சல் காரணமாக காமினி சிங்களப் பத்திரிகையாளர் நடுவில் ஒரு புதிராகக் காட்சியளித்தார். 1987 இல் ஒபறேஷன் லிபறேஷனிற்குச் சிறிது முன்பு ஜே. ஆர். காமினி நவரட்ணவிற்கூடாகபுலிகளோடு தொடர்பு கொள்ள முயற்சி செய்தார். இது, யாழ்ப்பாணத்துக்கான சமரை ஆரம்பிக்க முன்பு புலிகளின் நாடித்துடிப்பை அறியும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு நகர்வு என்று கூறப்படுகிறது. ஆனால் ஜே ஆரின் செய்தியோடு வந்த காமினி புலிகளால் சந்தேகிக்கப்பட்டார். இதுபற்றி யாழ்ப்பாணத்திலுள்ள சில விமர்சகர்கள் கூறும்போது காமினியை யாழ்ப்பாணத்திலிருந்து அகற்றும் நோக்கத்தோடு ஜே. ஆர். செய்த சதி இதுவென வர்ணிக்கிறார்கள்.

இப்பொழுது காமினியை, கொழும்பு நகரின் ஒதுக்குப்புறத்தில் அவரது அலுவலகம் என்று கூறப்படும் ஒளி குறைந்த அறையில் சந்திக்கலாம். அல்லது, அநேகமாக வாடிக்கையாளர்கள் மட்டும் வந்து போகும் பகட்டில்லாத மது பானக் கடைகளில் சந்திக்கலாம். தமிழர்கள் இதுவரை சந்தித்த சிங்களப் பத்திரிகையாளர்களில் காமினி வித்தியாசமானவர்.

இன்று கொழும்பில் சிங்களப பத்திரிகையாளர்கள் சுதந்திரம் கோரிக் குரல் எழுப்புகிறார்கள். அரசிற்கும் பத்திரிகையாளரிற்கும் இடையில் சில வருடங்களாக நிலவி வந்த எரிபற்று நிலை கடந்தவாரம் ''அத்த'' பத்திரிகையின் காட்டூனிஸ்ட் கத்தியால் குத்தப்பட்ட சம்பவத்தோடு எரியத் தொடங்கியுள்ளது. காட்டூனிஸ்ட் ஜிப்றியூனூஸ் தாக்கப்பட்ட சம்பவம் ஒரு பழிவாங்கல் என்று கொழும்பில் நம்பப்படுகிறது சில வாரங்களிற்கு முன் கனத்தை மயானத்தில் தளபதி கொப்பேகடுவவின் இறுதிக் கிரியைகளின் போது ஜனாதிபதி பிரேமதாஸாவின் சிந்தனையாளர்களில் ஒருவர் என்று கூறப்படுபவரும், அரசு சார்பு 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையின் பத்தி எழுத்தாளருமான தயான் ஜயதிலக (த அநுருத்த திலகசிறி) தாக்கப்பட்ட சம்பவத்தின் எதிரொலியே இதுவென்று கூறப்படுகிறது. தயானைத் தாக்கியவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள்தான் என்று அரச தரப்பினர் கூறுகிறார்கள்.

ஜே வி.பியின் இரண்டாவது கிளர்ச்சியோடு கொழும்புப் பத்திரிகையாளர் மீதான நெருக்கடிகள் ஆரம்பமாயின. கிளர்ச்சியின் போது ஜே வி. பியை ஆதரிப்பதா? அல்லது அரசை ஆதரிப்பதா? என்பதில் அநேகமான கொழும்புப் பத்திரிகைகளிடம் தடுமாற்றம் காணப்பட்டது. இரண்டு எஜமானர்களிற்கிடையில் பத்திரிகைக்காரர்கள் திணறினார்கள். எனவே தென்னிலங்கைச் சம்பவங்களை வெறுமனே செய்திகளாக மட்டும் சொல்லிவிட்டு, இந்தியா-புலிகள் யுத்தத்தைப் பற்றி விமர்சனங்களை எழுதலானார்கள்' பெரும்பாலான காட்டூன்களில் ஒரு சீக்கியச் சிப்பாய், அல்லது பொட்டு வைத்த புலி முக்கிய பாத்திரமாக இருந்தது ஆனால் படிப்படியாகக் கறுப்புப் பூனைகள் முன்னேறலாயின. ரூபவாகினியில் செய்திவாசிப்பவரான றிச்சர்ட் டி.சொய்சா ''இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.'' சன்னங்கள் துளையிட்ட அவரது சடலம் கல்கிசைக் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டது பத்திரிகையாளர்கள் எரியும் ரயர்களை மாலையாக அணிவதற்கு அஞ்சினார்கள். எனவே, ஒவ்வொரு பத்திரிகையும் தன்னளவில் ஒரு சுய தணிக்கை முறைக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டது. இப்பொழுதும் பத்தி எழுத்தாளர்கள் அரசைப்பற்றியோ அல்லது ஜனாதிபதியைப் பற்றியோ விமர்சிக்க அஞ்சுகிறார்கள். கடந்த வருடம் ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது அரசசார்பு லேக் ஹவுஸ் பத்திரிகைகள் தவிர அநேகமான பத்திரிகைகள் ஒருவித மௌனம சாதித்தன. லேக்ஹவுஸ்பத்திரிகைகள் எதிர்க்கட்சிகளைக் கடுமையாக சாடின. பின்னர், முன்னாள் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல அரசை விமர்சித்துச் சில சத்தியக்கடுதாசிகளை வெளியிட்டார். கொழும்பிலுள்ள பெரிய பத்திரிகைகள் அநேகமானவை அவற்றைப் பிரசுரிக்கத் தயங்கின. அவற்றை அப்படியே பிரசுரித்த குறிப்பிட்ட ஒரு சாராரை மட்டும் சென்றடையும் ''ராவய'' ''யுக்திய'' போன்ற சிறு பத்திரிகைகள் நெருக்கடிக்குள்ளாயின. இது பற்றி அஷ்வானி ரோல்வர், லங்கா கார்டியனில் (யூலை, 1. 1992) எழுதியுள்ளார். ''எப்பொழுதாவது சர்ச்சைகள் வெடித்தெழும் போது சிறிலங்காவின் பத்திரிகையாளர்கள் அதை மௌனத்தால் வெளிப்படுத்தி விடுகிறார்கள்'' என்று அவர் கூறுகிறார்.

இன்று கொழும்பில் பத்திரிகையாளர்கள் கோருவது எதனை! அவர்கள் குண்டர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புக் கோருகிறார்கள். அதோடு யுத்தத்தின் மெய் நிலையைக்கூறுமாறும் அரசை வற்புறுத்துகிறார்சள். யுத்தத்தின் மெய்நிலையை அரசாங்கம் கூறத்தவறியதால் தான் தளபதி கொப்பேக்கடுவவின் மரணம் பற்றிய சந்தேகங்கள் இன்னும் தொடர்வதாகக் கூறுகிறார்கள்

யுத்தத்தின் மெய்நிலையைக் கூறுமாறு அவர்கள் அரசைக் கோருவது எதற்காக? யுத்தம் வெல்ல முடியாதது. முடிவற்றது என்பவற்றை சிங்களவர்களிற்கு விளக்குவதற்காகவா? இல்லை. இங்குதான் பிரச்சினையே இருக்கிறது. அவர்கள் அரசை விமர்சிப்பதற்கான சுதந்திரத்தைத்தான் கேட்கிறார்கள் அதன் அர்த்தம், அவர்கள் யுத்தத்தைஎதிர்க்கிறார்கள் என்பதல்ல. தமிழர்களிடம் இரக்கமாயிருக்கிறார்கள் என்பதல்ல யுத்தத்தில் துருப்புக்கள் எதிர்பார்த்த வெற்றிகளை ஈட்டாததிற்குகாரணம் அரசாங்கம் யுத்தத்தைப்பிழையாக நெறிப்படுத்துவதே என்று விமர்சிப்பதற்கான சுதந்திரத்தை அவர்கள் கேட்கிறார்கள். மற்றும்படி இது கட்டாயமாக வெல்லப்பட வேண்டிய ஒரு யுத்தம் என்பதில் அவர்களிடம் அபிப்பிராய பேதங்கள் வெகு குறைவு. கொழும்பில் யாரையாவது எப்பொழுதாவது தாக்கக் கிடைத்தால் அவர்கள் அமைச்சர் தொண்டமானைத்தான் தாக்குகிறார்கள். தமிழர்களினதும் இந்தியர்களினதும் ஏக குறியீடாக அவர்கள் தொண்டமானைத்தான் காண்கிறார்கள்.

இவ்விதம் இனவாதத்தனத்தில் நிற்காத சிங்களப் பத்திரிகைகளாக ராவய, யுக்திய போன்றவற்றை கொழும்பிலுள்ள விமர்சகர்கள் கூறுகிறார்கள். ராவய, 1971 இல் ஜே.வி.பி.கிளர்ச்சியில் ஈடுபட்டவரும் பின் பத்திரிகைத் துறைக்குள் நுழைந்தவருமாகிய விக்டர் ஐவனை ஆசிரியராகக் கொண்டது. யுக்திய, இனங்களிற் கிடையிலான நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் (மேர்ஜ்) சார்பாக வெளியிடப்படுகிறது இதன் ஆசிரியர் சுனந்த தேசப்ரிய ஆங்கிலப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை அவற்றின் ஆசிரியத் தலையங்கங்களிலிருந்து விமர்சனக் கட்டுரைகள் வரை (சில விதிவிலக்குகளைத்தவிர) சகலதும் யுத்தத்தில் தமது துட்ட கெமுனுக்களை உற்சாகமூட்டுபவையாகவோ அல்லது யுத்தத்தின் வெற்றிகளை மிகைப்படுத்திக் கூறுபவையாகவோ காணப்படுகின்றன யாழ்ப்பாணத்தில் ''ஈழநாடு'' எரிக்கப்பட்ட போதோ அல்லது ''ஈழமுரசு''

(7ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியில் கண்டு எடுக்கப்பட்டது புவனேஸ்வரி விக்கிரகமா?

பூநகரி பல்லவராயன் கட்டுப் பகுதியிலுள்ள திரு. நா. தர்மலிங்கம் அவர்களது காணியில் இரண்டு மாதங்களுக்கு முன் விக்கிரகம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது பூநகரி ப. நோ. கூ. சங்கம் வழங்கிய தகவலின் பேரில் அங்கு சென்ற யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப. புஸ்பரெட்ணம் இவ் விக்கிரகத்தைக் கையேற்றார். ஆறு அங்குல உயரமும், 500 கிராம் எடையும் கொண்ட இவ் விக்கிரகம் வெண்கலத்தினால் செய்யப்பட்ட நிறைவான சிலையாகும். இது சோழர் காலத்தைச் சேர்ந்த புவனேஸ்வரி அம்பாளின் விக்கிரகம் என்று முதற்கண் அதனை ஆராய்ந்தவர்கள் முடிவு செய்தனர். இக்கருத்து இப்போது விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. சிலையைப் பற்றிய கருத்து அபிப்பிராய பேதத்துக்கு உள்ளாகியுள்ளது இதனைத்தொடர்ந்து இந்த விக்கிரகத்தின் பீடத்தில் (அடிப்பாகம்) பொறிக்கப்பட்டுள்ள சாசனம் (Inscription) கூறும் பொருளைத் தெரிந்து கொள்ள சாசனத்தின் புகைப்படங்கள் தொல் எழுத்தியல் நிபுணர்களின ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன,

சிலை பற்றி சுவீடன் உப்சலா பல்கலைக்கழக சமயங்களின் வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் பீற்றர் ஷல்க்கின் மதிப்பீடும், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப. புஸ்பரெட்ணம் தெரிவித்த கருத்தும் இங்கு இடம் பெறுகின்றன.

கேட்டு எழுதியவர்:
**மதன்**

### பேராசிரியர் பீற்றர் ஷல்க்.

இரண்டு மாதங்களுக்கு முன் இச் சிலை பூநகரி பல்லவராயன்கட்டில் கண்டெடுக்கப்பட்ட (Stray Find) பொருளாகும். இதனைப் புவனேஸ்வரி அம்பாள் என்று கொள்ளப்பட்டு என்னிடம் காண்பிக்கப்பட்டது. சிலையின் பீடத்தில் தொல்வரி எழுத்துக்கள் என்று கருதிய இடத்தில் பௌடர் தூவியிருந்தார்கள். என்னுடைய விருப்பத்தின் பேரில் பௌடர் நீக்கப்பட்டது. சிலையின் பீடத்தில் (அடிப்பாகம்) தேவநாகரி வடிவில் அமைந்த ''ரி'' என்ற எழுத்துப் போல் ஒன்று காணப்பட்டது. இதனைக் கொண்டு சிலர் புவனேஸ்வரி என்ற கருத்துருவத்தைக் கற்பனை செய்து கொண்டார்கள். உண்மையில் சாசனத்தில் (Inscription) புவனேஸ்வரி இடம்பெறவில்லை.

இந்தச் சிலையின் வடிவமைப்பு, தோற்றம், தன்மை ஆகியன தமிழகத்துடன் இணைந்தது. வெண்கலத்திலாலான இந்தச் சிலைக்கும் சிங்கள பௌத்தத்திற்கும் தொடர்பில்லை என்று பீற்றர் ஷல்க் கருதுகிறார்.

சிலையின் வடிவத்தை நுணுக்கமாக ஆராய்ந்தேன் நாகபட்டண சிற்பக்கலை வடிவத்தைக் கொண்டதான வார்ப்பு. ஆனால் சிலை நாகபட்டணத்தில் வார்க்கப்பட்டதா அல்லது நாகபட்டணக் கலை மரபில் பயிற்சி பெற்றவர்களால் வார்க்கப்பட்டதா என்பதை உறுதியிட்டுக் கூற முடியாது.

சிலை தொடர்பாக மூன்று சிக்கல்கள் உள்ளன. அவை:

★ சிலையின் தொடைக்குக் கீழ் தொங்கும் வெளியாடையின் புடைப்பாகக் காணப்படுவது புவனேஸ்வரி அம்பாளின் வாகனமான சிங்கம் என்று எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இது சிங்கம் என்ற அடையாளத்தைக் கூட உணர்த்தவில்லை.

★ சிலையின் பின்புற வார்ப்பில் வாலைப் போல் ஒரு தாக்கு (Support) காணப்படுகிறது. இதுவால்அன்று.

★ மற்றது, பீடத்தில் இருபபதாகக் கருதப்படும் சாசனத்தைப் பற்றியது. சாசனம் என்று கருதப்படுவது இன்னும் வாசிக்கப்படவில்லை.

சிலையின் வெளியாடை வலது கையில் கீழ் நோக்கித் தொங்குவதாகும். சிலை புவனேஸ்வரி என்ற பெண் தெய்வத்தின் சிலை என்று கருதுகிறார்கள். இக் கருத்துத் தவறானதாகும். மேலும், சிலையின் இடை ஒடுங்கியிருப்பதால் இதனைப் புவனேஸ்வரி அம்பாளின் சிலை என்று கொள்கிறார்கள். நின்றபடியுள்ள புத்தர் சிலையின் இடைமெலிந்துகாணப்படுவது நாகபட்டணம் புத்தர்சிலைகளில் காணப்படும் தன்மையாகும். இத்தன்மை இந்தியாவிலுள்ள புத்த சிலைகளுக்குப் பொதுவானது. எனவே இச் சிலையைப் புவனேஸ்வரி அம்பாள் என்று கருதுவதற்கு இடமில்லை.

சோழர்கால வெண்கலச் சிலைகளில் அமராவதி கால சிற்ப வடிவத்தின் தாக்கங்களைக்காணலாம். குறிப்பிட்ட இச் சிலையிலும் அமராவதி (ஆந்திரா) அமிசங்கள் பதித்துள்ளன ஆகவே இது கி. பி 11-12 நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலத்து புத்தர் சிலையாகும் என்பது எனது துணிபு. இச்சிலைக்கும் சிங்கள பௌத்தத்திற்கும் தொடர்பில்லை.

★ ★ ★

### சிரேஷ்ட விரிவுரையாளர் ப. புஸ்பரெட்ணம்:

இச்சிலை சோழர் காலத்துக்குரிய நாகபட்டணக் கலை மரபைக் கொண்டு சாணப்படுகிறது. இப்பிராந்தியத்தில் ஏலவே சோழர்காலச் கான்றுகள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சிலையின் பீடத்தில் காணப்படும் சாசனம் தேவநாகரியில் (சமஸ்கிருதம்) எழுதப்பட்டுள்ளது. சாசனத்தில் அடங்கியுள்ள கருத்தை தக்க முறையில் தெரிந்து கொண்ட பிறகுதான் சிலை பற்றிய கருத்தைத் தெரியப் படுத்த முடியும்.

★ ★ ★

சாசனத்தின் புகைப்படம் தற்போது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் ஆய்வு மேற்கொள்பவரும் தொலிலெழுத்தியல் துறை சார்ந்தவருமான ஒரு உள்ளூர்ப் பேராசிரியருக்கு அனுப்பப்பட்டுள்ளது. என்று பெயரை வெளியிட விரும்பாத அதே வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

# உடைந்த கொங்கிரசை மீண்டும் ஒட்டுவது

# நரசிம்மராவின் பிரதான திட்டம்

மு. திருநாவுக்கரசு

கொங்கிரஸிற்குள் காலத்திறகு காலம் ஏற்படும் பிளவுகள் கொங்கிரஸ் பதவியிலிருந்து இறங்குவதற்கான காரணங்களுள் ஒன்றாய் அமைவதுண்டு.

இந்திராகாந்தி காலத்தில் கொங்கிரஸில் இருந்து பிரிந்து சென்றோருக்கு தலைமை தாங்கிய மொராஜி சேசாய் 77 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இந்திராவைத் தோற்கடித்துப் பிரதமரானார்.

ராஜீவ்காந்தி காலத்தில் கொங்கிரஸில் இருந்து பிரிந்தோருக்குத் தலைமை தாங்கிய வி. பி. சிங் 88 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ராஜீவைத் தோற்கடித்துப் பிரதமரானார்.

சுதந்திர இந்தியாவில் பொதுவாக கொங்கிரசே பதவியிலிருந்து வருகிறது இரு தடவைகள் கொங்கிரஸை வீழ்த்திப் பதவிக்கு வந்தவர்கள கொங்கிரஸிலிருந்து பிரிந்த மொராஜி, வி. பி. சிங் போன்றோரே. 47 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஒரே கொங்கிரஸே பதவியிலிருந்துள்ளது. கொங்கிரஸ் மீது பொதுவான அதிருப்தி ஏற்பட்டபோதிலுப் கொங்கிரஸை வீழ்த்த கொங்கிரஸிலிருந்து பிரிந்தவாகளே தேவைப்பட்டனர். கொங்கிரஸிற்கு வெளியால் உருவாகிய எந்தவொரு தலைவரும் இதுவரை இந்தியப் பரதமராகவில்லை.

கொங்கிரஸிற்கு எதிராக இருக்கின்ற தேசிய ரீதியிலான பாரம்பரியக் கட்சிகள் பிரதானமாக இரண்டுதான். ஒன்று மத சார்பன்மைக கெதிரான இந்து அடிப்படை வாதத்தை கொண்ட பாரதிய ஜனதா - இரண்டு கொம்யூனிஸ்ட கட்சி பாரதிய ஜனதாவால் வட இந்தியாவிற்கு வெளியே அதுவும சில மாநிலங்களைத் தவிர செல்வாக்குப் பெற முடியவில்லை. பாரதிய ஜனதாவுக்கு வட இந்திய மாநிலங்களுக்குள் பிறகாலத்தில் ஏற்பட்ட செல்வாக்குக்கு கொங்கிரஸ் கட்சிக்குள் தொடர்ந்து ஏற்பட்டு வந்த பிளவுகளும அவர்கள் ஒருவரையொருவர் கணடித்து வந்தமையும் முக்கிய காரணங்களுள் ஒன்றாய் அமைந்தது. எப்படியாயினும் பாரதிய ஜனதாவால் ஆடசி அதிகாரததுக்கு வரக்கூடிய பலத்தைப் பெறமுடியவில்லை.

கொம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் அவர்களின் செல்வாக்கு ஒரு சில மாநிலங்களில் மட்டுமே இருந்தது. மேலும் கொங்கிரஸ் அல்லாத கடசிகள் இரு தடவைகள் பதவிக்கு வந்ததாயினும் பழைய கொங்கிரஸ் தலைவர்களின் தலைமையின் கீழ் உதிரிக் கட்சிகளை இணைத்த கூட்டாட்சி அமைக்க முடிந்ததே தவிர தனிக்கட்சியாய்ப் பதவிக்கு வர முடியவில்லை. இதில் கவனிக்கப் படக்கூடிய விடயமென்னவெனில் உதிரிக் கட்சிகளாற் கூட்டாட்சி அமைக்க முடிந்த போதிலும் பழைய கொங்கிரஸ் தலைவர்களின் தலைமையின் கீழ் அக்கூட்டாட்சி கூட சாத்தியமற்றதாயிருந்தது என்பதே. ஆகையால் கொங்கிரஸிற்கெதிரான மாற்றுத் தலைமையைக் கொங்கிரஸிலிருந்து பிரிந்தவர்களால் மட்டுமே கொடுக்க முடிந்தது. இவ்வாறு நோக்குகையில் கொங்கிரஸின் ''எதிரிகள்'' கொங்கிரஸில் இருந்து பிரிந்து சென்றோரே என்பது தெரிகிறது.

தன் அரசியல் வாழ்வின் ஆரப்ப நாளிலிருந்தே கொங்கிரஸ் உறுபபினராய் வாழ்ந்து வருபவர் நரசிம்மராவ். எழுச்சியிலும், வீழ்ச்சியிலும் கொங்கிரஸுடனேயே நின்றவர். ராஜீவ் இவரை ஒதுக்கியபோதிலும் கொங்கிரஸுக்குஎதிராகப்போகாது அமைதியடைந்து கொங்கிரஸுக்குள்ளேயே நின்றவர். இவ்வாறான ஒருவருக்கு கொங்கிரஸின் அவ்வப்போதைய வீழ்ச்சிக்கான காரணங்கள் பற்றிதெளிவான விளக்கம் இருப்பது இயற்கையே இதற்கு ஓர் அடிப்படையிலான இரு விளக்கங்கள் உண்டு ஒன்று கொங்கிரஸை வீழ்த்துபவர்கள் கொங்கிரஸில் இருந்து பிரிந்து செல்பவர்கள் தான் என்றும், இரண்டு அவ்வாறு அவர்கள் பிரிந்து செல்வதற்கான காரணம் கொங்கிரஸ் கட்சிக்குள்ளிருக்கும் உட்கட்சி ஜனநாயக இன்மையுமாகும்.

நரசிம்மராவ் பதவிக்கு வந்த விதத்தையும் அவர் பதவிக்கு வந்த பின்பு ஏனைய கட்சிகள் பற்றி நடந்துகொள்ளும் விதத்தையும் நோக்கினால் இவை பற்றியவிளக்கம் தெளிவாகும். உட்கட்சி ஜனநாயகத்திற்காக நரசிம்மராவ்பாடுபடுகிறாரோ இல்லையோ என்பது ஒருபுறமிருக்க உட்கட்சி ஜனநாயகத்தை உருவாக்க முயல்கின்றார் என்ற அபிப்பிராயம் நரசிம்மராவால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உட்கட்சி ஜனநாயக சூழலில் ஒரு நம்பிக்கை ஏற்படும்போது பிரிந்து சென்றவர் இணைந்து கொள்வது இயல்பாகும். அதே வேளை இந்திய அரசியல் வாதிகளிடம் முனைப்புப் பெற்றிருப்பது கொள்கையை விடப் பதவி மோகம்தான். மேலும் இந்திய அரசியல் வாதிகள கொள்கைக்கு அப்பால் இலதவிற் பணம் கொடுத்தும் வாங்கப்படக் கூடியவர்கள் மேற்குறிப்பிட்ட ''உட்கட்சி ஜனநாயக'' சூழல், பதவி பண விவகாரம் ஆகிய இரண்டும் கொங்கிரஸை மீண்டும் கணிசமான அளவு ஒன்றிணைக்க வழிவகுக்கலாம்.

ராஜீவின் மரணத்தைத் தொடர்ந்து அறுதிப் பெரும்பான்மை பெறாத கொங்கிரஸ் கட்சிக்குள் பதவிக்கான போட்டிகள் எழுந்தன. புறநிலை யதார்த்தமும் நரசிம்மராவின் தந்திரோபாயமும் இணைந்து நரசிம்மராவைப் பிரதமராக்கியது.

மிகக் குறுங்காலத்தில் இரு பொதுத்தேர்தல்களைச் சந்தித்த இந்தியா மூன்றாவது பொதுத்தேர்தல் ஒன்றைச் சந்திக்கத் தயாராக இருக்கவில்லை. அத்துடன் மூன்றாவது பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தினார் தான் பதவிக்கு வரமுடியுமென பாரதிய ஜனதா நம்பவில்லை. எனவே தளம்பலான நிலையில் கொங்கிரஸ் சிறிதுகாலம் பதவியில் இருப்பதை பாரதிய ஜனதா விரும்பியது. அத்துடன் இளம் வயதினரான சரத்பவார் கொங்கிரஸுக்குத் தலைமை தாங்கத் தொடங்கி விட்டால் கொங்கிரஸின் தலைமைத்துவம் ஸ்திரப்பட்டுவிடுமென பாரதிய ஜனதா அஞ்சியது. இந்நிலையில் கிழண்டிபபோயுள்ள நரசிம்மராவ் பதவிக்கு வருவது தமக்கு சாதகமாகுமென பாரதிய ஜனதா கருதியது.பாரதிய ஜனதாவின் இந் நோக்கு நிலையை நரசிம்மராவ் தமக்கு சாதகமாகக் கையாண்டார்.

நரசிம்மராவ் பதவிக்கு வரத் தவறின் அதனாலேற்படக்கூடிய அரசியல் ஸ்திரமின்மையையும் இந்து அடிப்படை வாத பாரதிய ஜனதாவினால் ஏற்படக்கூடிய ஆபத்தையும் உணர்ந்துகொண்ட கொம்யூனிஸ்ட்டுகள் நரசிம்மராவ் பதவிக்கு வருவதை விரும்பினர். ஆனால் கொங்கிரஸ் கட்சிக்குள் பதவி இழுபறிகள் பெரிதாய் நிலவின. கொங்கிரஸ் கட்சி பாராளுமன்றக் குழுவுக்குள் எத்தலைவரும் ஸ்திரத் தன்மையைப் பெற முடியாத சூழல் காணப்பட்டது கொங்கிரஸுக்குள் ஒவ்வொரு தலைவரையும் சுற்றிக் குழுக்கள் தோன்றின. இந்நிலையில் கொங்கிரஸ் பாராளுமன்றக் குழுவை வைத்துக்கொண்டு தான் பதவிக்கு வருவது கடினம்என்பதைஉணர்ந்தநரசிம்மராவ் தன்னை ''உட்கட்சி ஜனநாயக'' வாதியாகக் காட்டிக்கொண்டார் பிரதமராவதற்கான கட்சியின் தலைமைத்துவத்தை வெற்றிபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் மாத்திரம் தீர்மானிக்காது கட்சியின் மத்தியகுழு மாநிலக்குழுக்களின் தலைவர்களை ஒன்றிணைத்த ஒரு சபையின் மூலமே தீர்மானிக்க வேண்டுமென்ற கருத்துக்கு வந்தார். பிரதமரைத் தெரிவதில் மாநிலக் குழுக்களின் உறுப்பினர்கள், கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு இதுவரை காலமும் பங்கிருந்ததில்லை, நரசிம்மராவின் இவ் அமைப்பானது தலைவர் தெரிவில் இவர்களைப் பங்கெடுக்கவைத்தால் இவர்கள் நரசிம்மராவை ஆதரிப்பவர்களாயினர். இத் தந்திரோபாயமே சரத்பவாரையும் அர்ஜுன்சிங்கையும் பிரதமர் பதவிப் போட்டியில் இருந்து கடசியில் ஒரம்கட்ட உதவியது.

சீன முதுபெருந்தலைவர் டெங்-ஸியாவோ-பிங் நடவடிக்கையுடன் இதனை ஒப்பிட்டால் சுவாரஸ்யம் மிக்க தெரிவு ஒன்றைப் பெறலாம். சீனத்தலைவர் மாவோசேதுங் காலமானதும் மாவோ வின் மனைவி உடபட்ட நால்வர் குழு பதவிக்கு வரும் நிலை காணப்பட்டது இவர்களைத் தோற்கடிப்பதற்கு டெங்-ஸியாவோ-பிங் முன்வைத்த கோசம் இளைஞர்களைப் பதவிக்கு கொண்டுவருகல்என்பதாகும். இங்கு இளைஞர்கள் என்ற சொல் வயதில் அறுபதுகளைக் குறித்து நிற்கும், எழுபதுகள், எண்பதுகளைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்களின் தொகையை விடவும் அறுபதுகளுக்கு கீழ்ப்பட்ட கட்சி உறுப்பினர்களின் தொகை அதிகம். வயதால் முதியவரான டெங் இக்கொள்கையை முன்வைத்ததும் டெங்கை ஆதரிப்பதன்மூலமே தான் பதவிக்கு வரும்வாய்ப்பு கிட்டிய தூரத்தில் உண்டென நினைத்த அறுபதுகளுக்கு உட்பட்டதுகள் டெங்கை ஆதரித்தனர். இதன் மூலம் டெங் அரச கட்டில் ஏறினார் ''டெங்கின் ''இளைஞர் அரசியல்'' என்ற பதமும் நரசிம்மராவின் ''உட்கட்சி ஜனநாயகம்'' என்ற பதமும் ஒரே தந்திரோபாயத்தின் இரு வீச்சுக்கள்.

இவ்வாறு உட்கட்சியை வெற்றிகொண்ட நரசிம்மராவ் பாரதியஜனதாவையும் கொம்யூனிஸிட்டுகளையும் அவ்வப்போது அரவணைப்பவராய்க் காட்டிக்கொண்டு தனக்குஅறுதிப் பெரும்பான்மை பெறும் வழிவகையில் பழைய கொங்கிரஸ்காரரையும் உதிரிக் கட்சிகளைச் சார்ந்தோரையும் கொங்கிரஸுக்குள் இணைக்கத் திட்டமிட்டாரென நம்பலாம். கொம்யூனிஸிடடுக்களையும் பாரதிய ஜனதாவையும் இடைக்கால அணைப்புக்கொள்கை மூலம் கையாள்வதும் கொங்கிரஸிலிருந்து பிரிந்த சக்தியை பிரதானமாக ஜனதாகள், அவர்களுடன் கூடடான உதிரிககட்சிகள் என்போரை தன்னுடன் இணைப்பதுமே இவரது முயற்சியாக அமைந்தது, கொங்கிரஸில் இருந்து பிரிந்து சென்றோர்களை நிர்மூலமாக்க வேண்டுமென்ற எதிர்க்கணிய அரசியற் கோட்பாட்டை நரசிம்மராவ் கொண்டிருக்கவில்லை மாறாக வென்றெடுக்கப்படவேண்டிய எதிரிகளெனக்கொண்டிருந்தார். அவ்வாறு வென்றெடுத்தற் கொள்கைதான் ஒரே நேரத்தில் இருவிடயங்களைக் சாதிக்க வல்லது ஒன்று ஜனதாதள்ளை ஒழிப்பது: இரண்டு தனக்கு அணிசேர்ப்பது இத்தகைய இரட்டை வழிமுறைகள் மூலம் ஜனதாதள்ளை நரசிம்மராவ் உடைத்தார் என்றே கூறலாம்.

தெலுங்க தேசம் ஜனதாதள் ஆகிய கட்சிகளிலேற்பட்ட உடைவிற்கு நரசிம்மராவே காரணமெனக் கட்சிகள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டி வருகின்றன தெலுங்கதேசத்தின் லோக்சபா 6 உறுப்பினர்கள் கொங்கிரஸுடன் இணைந்து கொண்டதைத் தொடர்ந்து கொங்கிரஸ் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையைப் பெற்று விட்டது

தெலுங்கதேச 6 உறுப்பினர்களும் சில மாதங்களுக்கு முன்பே பிரிந்து விட்டனராயினும் அவர்கள் உடனடியாகக் கொங்கிரஸுடன் இணைக்கப் படவில்லை.அவ்வாறுஇணைந்திருந்தால் நரசிம்மராவ் தான் அவர்களைப் பிரித்தார் என்ற குற்றச்சாட்டு வெளிப்படையாகிவிடும் எனவே பிரிந்து சிலமாதங்களின் பின்பே இவர்களைத் தன்னுடன் நரசிம்மராவ் இணைத்துள்ளார் எனக் கருதலாம்.

இதேபோலவே அண்மையிற் பிரிந்துள்ள ஜனதாதள் எம்.பி.கள் 20 பேரும் சிறிது காலத்தின் பின்பு கொங்கிஸுடன் இணைக்கப்படலாமென எதிர்பார்க்கலாம். இவ்வாறு இணைந்து விட்டால் கொங்கிரஸ் தனிககட்சியாக மிக ஸ்திரமான பலத்தைப் பெற்று விடும் அபபோது கொம்யூனிஸ்ட்டுக் களையோ பாரதிய ஜனதாவையே ''தாஜா'' பண்ண வேண்டிய அவசியம் நரசிமராவுக்கு இருக்காது. இன்றைய நிலையில் லோக்சபாவின் சூழலில் இது ஊர்ஜிதமாகி விட்டது.

ஜனதாதள்ளால் இனிமேல் பதவிக்கு வரமுடியாத நிலையை ஏற்படுத்துவது நரசிம்மராவின் ஒரு முக்கிய முயற்சியாகும். பதவிக்கு வர முடியாதென்று நம்பும் ஜனதாதள் உறுப்பினாகள் பதவிக்கு வரக்கூடிய தமது முன்னாள் கொங்கிரஸுடன் இந்நாளில் இணைவது இயல்பானதே. இவ்வகையிற் பார்க்கும் போது நரசிம்மராவ் பதவிக்கு வந்ததிலிருந்து அவர் மேறகொண்ட தீவிர முயற்சியென்பது உடைந்து சென்ற காங்கிரஸ் காரரை மீண்டும் இணைப்பதென்பது தான் கடந்த ஓராண்டுகால இடைக்காலத்தை நரசிம்மராவ் இதன் பொருட்டுப்பயன்படுத்தியுள்ளார் எனநம்பலம் இந்த வகையிற் பார்க்கும் போது பாரதிய ஜனதாவினதும், கொம்யூனிஸ்ட்டுக்களினதும் கணக்குப் போடலை நரசிம்மராவ் தோற்கடித்து விட்டாரெனக்கூறலாம். பலப்படுத்தப்பட்ட கொங்கிரஸானது, கொம்யூனிஸ்ட்டுக்களுடனும் பாரதிய ஜனதாவுடனும் மோதக் கூடியவல்லமை உள்ளதென்பதே யதார்த்தம்

அதிதீவிர பிரச்சினைகளைப் பின்போடுவதன் மூலம் தன்னைப் பலப்படுத்தும தன்மை கொண்டவர் நரசிம்மராவ். அந்தப் பின் போடப்பட்ட காலகட்டத்துக்குள் தன்னைச் சுதாகரித்து பலப்படுத்துபவர் இவர் இவ்வாறுதான் பாபர் மசூதி—ராமஜென்ம பூமி விவ

(7 ஆம் பக்கம் பார்க்க)

# போதையின் விளைவால் - தம் வாழ்வைக் குறைக்கும் தேனீக்கள்

உஷ்ண காலங்களில் மலர்களிலிருந்து கிடைக்கும் இனிப்புச்சுவை தேனீக்களுக்கு போதையை உண்டுபண்ணுகிறதாம். இந்த போதையினால் சில தேனீக்களுக்கு கூட்டுக்குத் திரும்ப வழி தெரியாது போய்விடுகிறது இதனால்மரங்களில் மோதி அல்லது குட்டைகளில் வீழ்ந்து மாண்டு விடுகின்றன என் றுதேனீக்கள் சம்பந்தமாக ஆராய்ச்சியிலீடுபட்ட குயின்ஸ் லாந்து சர்வகலாசாலை பேராசிரியர் டாக்டர் எரொல்ஹசன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் போதையோடு ஒரு தேனீ கூட்டுக்குத் திரும்பினாலும் கூட காவற்காரத் தேனீக்கள் அதை உள்ளே செல்லவிடுவதில்லையாம் போதையிலிருப்பதே காரணமாம் ஆவே குறிப்பிட்ட தேனீ தனிப்பட்டு விபத்துக்குள்ளாகி அல்லது வேறு ஒரு எதிராளிக்கு இரையாகிறது.

ஒரு தேனீயின் சாதாரண வாழ்நாள் 36முதல் 40நாட்கள் வரையானது என கூறிய பேராசிரியர் தேனீக்கள் போதைக்குட்பட்டால் 19நாட்களிலேயே இறந்து விடும் எனத்தெரிவித்தார்.

# ஜெயலலிதா போக்கை மாற்றாவிடில் ஜன. 31 முன் புதிய முதலமைச்சர்

– சுப்பிரமணியம் சுவாமி எச்சரிக்கை

(சென்னை)

முதலமைச்சர்செல்விஜெயலலிதாவின் தவறான ஆட்சி பற்றிநான் மக்களுக்கு எடுத்துக் கூறவிருக்கிறேன். செல்வி ஜெயலலிதா தனது சர்வாதிகாரப் போக்கையும் ஊழல் முறைகளையும் மாற்றாவிடில் ஜனவரி 31ம்திகதியளவில்தமிழ் நாட்டில் புதிய முதலமைச்சர் ஒருவர் இருப்பார். இவரது ஊழல் பற்றி விசாரிக்கவும் கமிஷன் ஒன்று நியமிக்கப்படும்.

இவ்வாறு ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம்சுவாமிசென்னையில் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் நான் முதலமைச்சர்ஜெயலலிதாவின் ஊழல் மலிந்த ஆட்சிபற்றியும் எல்.ரி.ரி. யுடன்அவர்வைத்துள்ள தொடர்புகள்பற்றியும் தமிழ் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறவேவிரும்புகின்றேன்

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை தடுப்பதே முதலமைச்சரின் கடமையாகும். ஆனால் தடுப்பதற்கு பதிலாக விடுதலைப் புலிகளுடன் இணக்கத்துக்கு வந்துள்ளார். இது 1991ஆம் ஆண்டில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்குதுரோகம் செய்வதாகும் எனவும் அவர்தெரிவித்தார்,

இந்திய அரசாங்கம் விடுதலைப் புலியினரின்நடவடிக்கைகளை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ளது. இத்தகவல் கிடைத்த வட்டாரங்களை நான்தெரிவித்தால் அதனால் உளவு பார்க்கும் வேலைகள் சீர்குலைக்கப்படும்.

மேலும் விடுதலைப் புலிகள் இலங்கையின் வடக்கிற்கு பெற்றோல்கடத்திச் செல்வது இந்தபேரத்திற்கு சான்றாகும் புலிகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பதில் கூட தற்போது தளர்வுகள்ஏற்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

பத்திரிகையாளர் ஒருவர் டாக்டர்சுப்பிரமணியம்சுவாமி அவர்களிடம் முதலமைச்சருக்கு மத்திய அரசின் கறுப்புப் பூனைகளினால் பாதுகாப்பு அளிக்கப்படும்போது எதற்காக அவர் விடுதலைப் புலிகளுடன் பேரம் பேசினார் எனக்கேட்டபோது அவர் பயமடைந்துள்ளார் என்பதனைக் காட்டுகிறது என்று அவர் பதிலளித்தார்.

ஜெயலலிதாஅரசாங்கத்தை கண்டித்த அவர் அரசாங்க ஆளும் கட்சிக் குண்டர்கள் சகல ஜனநாயக உரிமைகளையும் தாக்கிவருவதுடன் பத்திரிகைகளும் அச்சுறுத்தப்பட்டுள்ளது உகண்டாவில் இடிஅமீனின்ஆட்சி நிலவியதைப் போலவே தற்போது தமிழ் நாட்டில் நிலைமை உள்ளது எங்குபார்த்தாலும் ஊழல் நிறைந்து அரசாங்க இலாகாக்களிலும் லஞ்சம் கொடுக்காமல் எதையும்செய்ய முடியாதுள்ளது எனத் தெரிவித்தார்.

## உடைந்த

காரத்தை நரசிம்மராவ் கையாண்டார் இதே பாணியில்தான் கட்சிப் பிரச்சினைகளையும் கையாண்டு தன்னை அவர் பலப்படுத்தியுள்ளார். மூன்று ஆண்டுகளுக்கு உள்நாட்டுப் பிரச்சினைகளை ஒத்திப் போடுவோம்; நவீன இந்தியாவை கட்டிஎழுப்ப வாருங்கள் என்ற இவரது அழைப்பானது கூட இத்தகைய தன்மை வாய்ந்ததே. இவர் பிரச்சினையை ஒத்தி போடும் ஒவ்வொரு கட்டத்திலும் தன்னைப் பலப்படுத்த அதைப் பயன்படுத்தினார் என்றே கூறலாம்

நரசிம்மராவ் ''சூழ்ச்சிக்காரன்'', ''சதிகாரன்'', ''கட்சிகளைப் பிரிக்கும் ஜனநாயக விரோதி'' இப்படியெல்லாம் எதிரணியினர் இவர்மீதுகுற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர் உண்மையில் நரசிம்மராவின் கரங்கள் மேற் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களில் சம்பந்தப்பட்டவையாயினும் கட்சிகளின் உடைவும் கொங்கிரஸுடனான அவற்றின் இணைவும் சட்டபூர்வ தோற்றத்தைக் கொண்டவை ஆகையினால் இக் குற்றச் சாட்டுக்கள் எதுவும் நரசிம்மராவின் பதவியைப்பாதிக்கமாட்டா. இவ்வாறு வாழைப் பழத்தில் ஊசியேற்றுவது போலவே நரசிம்மராவ் தனது அரசியலை நடாத்திவருகிறார்.

# நம்பிக்கை வீணாகிவிட்டது கிழக்கு பா.உ. புலம்பல்

''இதுவரை காலமும் அரசின் மீது நான் வைத்திருந்த நம்பிக்கை வீண் போவது போல தெரிகின்றது, எம்மைத் கறிவேப்பிலை போல, பயன்படுத்திவிட்டு எறியும் மனநிலையைஅரசாங்கம்கைவிட்டு விடவேண்டும்''

மேற்கண்டவாறு, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைமீதானவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜே.திவ்வியநாதன் தெரிவித்துள்ளார்

அரசு அமைதியை ஏற்படுத்தித் தரும் என்ற எமது நம்பிக்கை 90 வீதம் ஏமாற்றமாகவே போய்விட்டது இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் பாராளுமன்றத் தெரிவுக்குழு எதனைச் சாதிக்கும் என்று சந்தேகிக்கும் நிலை தோன்றியுள்ளது

பூச்சியமான ஒரு நிலையிலேயே தமிழர்கள் இருக்கிறார்கள்

நான் ஈழம் கேட்பவன் அல்ல தமிழ்ப்பகுதிகளில் அரசு அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தித் தரும் என்ற நம்பிக்கையில் முழு ஒத்துழைப்பை வழங்கினேன் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டபோதெல்லாம் உறுதுணையாய் நின்று வாக்களித்தேன் எம்மை அரசு ஒடு கேங்காய்களாக நினைக்கக்கூடாது எனவும்தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்-

# முல்லை கல்வி திணைக்களம் ஒட்டுசுட்டானில் இயங்குகிறது

முல்லைத்தீவு மாவட்ட கல்வித் திணைக்களம் தற்காலிகமாக ஒட்டுசுட்டானில் பாதுகாப்புக்கருதி இயங்கி வருகிறது-

இவ்வலுவலகம் முல்லைத் தீவில் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த இரண்டு வருட காலம் முதல் புதுக்குடியிருப்பில் இயங்கி வந்தது-

புதுக்குடியிருப்பில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கலாமென்ற அச்சத்தினால்அலுவலக ஆவணங்களைப் பாதுகாப்பதைக்கருதி ஒட்டுசுட்டானுக்கு இடமாற்றப்பட்டுள்ளது-

முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது பல ஆசிரியர்களது ஆவணங்கள் முற்றாக எரிந்துசாம்பரானதும் குறிப்பிடத்தக்கது-

இதேவேளை மற்றைய அலுவலகங்கள் புதுச்குடியிருப்பிலேயே இயங்கிவருகின்றன-

(82)

## கொழும்பில்

''முரசொலி'' காரியாலயங்கள் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட போதோ கொழும்பிலுள்ள பெரும்பாலான பத்திரிகையாளர்கள் கந்திரமான மௌனம் சாதித்தார்கள். காமினிநவரட்ணவிற்கு முன்பு சற்றர்டே றிவியூவின் ஆசிரியராக இருந்த சிவநாயகம் இப்பொழுது இந்தியாவில் விசாரணைகள் இன்றிச்சிறை வைக்கப்பட்டுள்ளார் இது விசயத்தில் சிவநாயகத்திற்காக குரல் எழுப்புவதற்கு கொழும்பிலுள்ள எத்தனை பத்திரிகையாளர்கள் தயார்?

குற்றமற்ற நிராயுதபாணிகளான தமிழர்கள் கொல்லப்பட்டபோதெல்லாம் இவர்கள் சாதித்த சூதான மௌனத்தின் நீட்சியாகவே, இன்று கொழும்புப் பத்திரிகையுலகம் அஷ்வானி ரோல்வர் கூறுவது போல ''பேசும் மௌனத்துள்'' (Eloquent Silence) தள்ளப்பட்டுள்ளது. தமிழர்களிற்கு எதிராகப் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகால நிலை இன்று சிங்களவர்களின் குரல்வளையையும் நெரிக்கின்றது.

கடந்த மேமாதம், இரண்டாம் திகதி, கொழும்பு புதிய நகரமண்டபத்தில் 'சுதந்திரப் பத்திரிகை இயக்கம்' அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது சிறப்புரையாற்றிய ஒரு தமிழ்ப்பத்திரிகையாளர், அங்கு கூறியவை கவனிப்புக்குரியவை:

''கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திர மறுப்பு,பத்திரிகைச்சுதந்திரமறுப்பு, தணிக்கை இவையனைத்தும் இன்றைய நிலையில் இனத்துவப் பிரச்சினையுடன் ஒருவகையில் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளன''

''1979 ஜூலை,15-ம் திகதி யாழ்ப்பாணத்தில் அமுலுக்கு வந்த அவசர நிலையின் பிற்பாடு மெல்லமெல்ல அரசு வடக்கு - கிழக்கு பத்திரிகைச் சுதந்திரத்தையும் அரசியற் குரலையும் ஒடுக்க ஆரம்பித்தமையின் தவிர்க்க முடியாத - தர்க்க ரீதியான விளைவே இன்றைய நிலை'' ...

## சிற்றாலய விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்- போதனா மருத்துவமனையில் அமைந்திருக்கும் ஆரோக்கிய அன்னை ஆலய சிற்றாலயவிழா ஆரம்பமாகியுள்ளது-

தினமும் மாலை 5-15 மணிக்கு ஆராதனை ஆரம்பமாகும்- இன்று மறையுரை, திருப்பலி ஆகியனவும் நாளை நோயாளர் தினம் -திருப்பலி; விசேட ஆசீர்வாதம் ஆகியனவும் 30 ஆம் திகதி காலை 6-15 மணிக்கு திருநாட்பாடற்பலி நடைபெறும்-

## இலவச வைத்திய சேவை நிலையம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக இலவச வைத்திய சேவை நிலையம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை எட்டுமணி தொடக்கம் நடாத்தப்படவுள்ளது-

இதற்கான ஏற்பாடுகளை சாவகச்சேரி லியோ- கழகத்தினர் மேற்கொண்டுள்ளனர்- இச்சேவை நிலையத்தில் இலவச வைத்தியப் பரிசோதனைகளுடன் அதற்குரிய மருந்துகளும் இலவசமாக வழங்கப்படும் என சாவகச்சேரி லியோ கழகத்தினர் தெரிவித்துள்ளனர்-

(35)

# மென்பான தயாரிப்பு; பயிற்சிக் கருத்தரங்கு

(நமது நிருபர்)

மென்பானங்கள், பழரசங்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்பட வேண்டிய தொழில் நுட்ப முறைகளும், கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதார ஒழுங்குகளும் பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று நாளை 29-8-92 சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள யாழ் மாநகரசபைநூல்நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் உள்ளூர் மென்பான தயாரிப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

# சிறிலங்கா பொலிஸ் தினக் கொண்டாட்டம் ரத்து

(கொழும்பு)

கொழும்பில் எதிர்வரும் 3-ம் திகதி வியாழக்கிழமை கோலாகலமாக நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த வருடாந்த பொலிஸ் தினக்கொண்டாட்டங்கள் ரத்துச் செய்யப் பட்டுள்ளன.

பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்தில் முழுநாள் நிகழ்ச்சியாக இந்தக் கொண்டாட்டம் நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

ஊர்காவற்றுறை அராலித் துறையில் அண்மையில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சிரேஷ்ட இராணுவ கடற்படை தளபதிகள் மரணமானதால் நாட்டில் ஏற்பட்ட துன்பகரமான சூழ்நிலை காரணமாகவே இந்தக் கொண்டாட்டங்கள் ரத்து செய்யப் பட்டிருப்பதாகப் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

## அரச அதிபர் அகதிகளை சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்துள்ள அகதிகளை அரச அதிபர் இன்று சந்திக்க உள்ளார்.

இவருடன் செயலக புனர்வாழ்வுப் பிரிவு உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் செல்ல உள்ளனர். (க)

## சமுகம் அளிக்கவும்

(பண்டத்தரிப்பு)

நாளை காலை 9மணிக்கு சகல கொத்தணிஅதிபர்களும் யாழ் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு சி வே மகேசவேலுவை தவறாமல் சந்திக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

அதே நாளில் முற்பகல் 10 30 தொடக்கம் யாழ் கல்விப் பகுதியினரை சகலஆண்டு 6—11 வரை உள்ள பாடசாலை அதிபர்களையும் பண்டத்தரிப்புக்கோட்ட சேவைக்கால ஆலோசகர்களையும் சந்திக்கவும். (பா)

## தபாலகங்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து மக்களின் வசதிக்காகபண்டத்தரிப்பு தபால் நிலையம் சங்கானை தபால் நிலைய கட்டடத்திலும், அளவெட்டி தபால் நிலையம் மானிப்பாய் தபால் நிலைய கட்டடத்திலும் இயங்க வைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பெரும்பாக அஞ்சல் அத்தியட்சகர் க. இராஜேந்திரம் அறிவித்துள்ளார்.

பொது மக்கள் தங்கள் கடித பட்டுவாடாக்களை மேற்படி நிலையங்களில் நேரடியாகச் சென்று பெற்றுக் கொள்ளலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உபகரணங்களுக்கு அனுமதி

வடபகுதிக்கு விவசாய உபகரணங்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

நீர் இறைக்கும் இயந்திரங்கள், மண்வெட்டிகள், தெளிகருவிகள் போன்ற விவசாய உபகரணங்களை விவசாய விஸ்தரிப்புப் பணிப்பாளர் அல்லது கமநலசேவை உதவிப் பணிப்பாளரது சிபாரிசுடன் வவுனியா ராணுவ தலைமையகத்தில் இதற்கான அனுமதியைப் பெற்று எடுத்துச் செல்ல முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சுகாதார அதிகாரி பார்வையிட்டார்

(நமது நிருபர்)

மானிப்பாயில்அமைந்துள்ள அகதிமுகாம்களில் நிலவும் சுகாதார சீர்கேடுகளை யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் இரத்தினசபாபதி நேரில் சென்று பார்வையிட்டார்.

நேற்றுக்காலை அப்பகுதியில் உள்ள பல முகாம்களையும் பார்வையிட்டு அங்குநிலவும் சுகாதார சீர்கேடுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அவர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதனைத்தொடர்ந்துமுதற்கட்டமாக முகாம்களில் புதிய மலசலகூடங்கள் அமைக்கப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது. (ச)

## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ கால தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 6 00 மணி தொடக்கம் 8 00 மணிவரையும்பொன்சுந்தரலிங்கம் அவர்களின் பாட்டு இடம் பெறும் இந்நிகழ்வில் பக்கவாத்தியங்களாக வயலின் ஆர் இராதாகிருஸ்ணன், மிருதங்கம் எஸ். மகேந்திரன் ஆகியோர் பங்கு கொள்கின்றனர்.

★ ★ ★

ஆனைப்பந்தி யாழ்மோசை மன்றம் வழங்கும் இசைவிழா இன்றுமாலை6 35மணிதொடக்கம் 9.35 மணிவரை நல்லை ஆதீனத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் மங்கள விளக்கை தொலைக்கல்வி போதனாசிரியர் எஸ். சண்முகராஜா ஏற்றுவார் தலைமை உரையை இ ஜெயராஜ்அவர்கள்நிகழ்த்துவார் பிரதம விருந்தினர் உரையை பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும் சிறப்புரையை திரு புதுவை இரத்தினதுரை அவர்களும் நிகழ்த்துவார்கள் தொடர்ந்து நிவேதனம் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

★ ★ ★

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆவணிப்பூர உற்சவம் இன்று மாலை விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி திருமுறைப்பண்ணிசை, பக்தி ரசகீதங்கள் ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற்றுக் திருத்தொங்கல் அலங்காரத்தில் அம்பாள் திருவீதிவலம் வருவாள்.

28/08/92

# சொந்த வான் பரப்பில் பறக்க ஈராக் விமானங்களுக்கு தடை

[பாக்தாத்]

தெற்கு ஈராக்கின் மீது ஈராக்கிய வான் படை நுழையக்கூடாத பகுதி என அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்த ஏற்பாடு நேற்று மாலை முதல் அமுலுக்கு வந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின் படி குறித்த வான்பரப்புப் பகுதிக்குள் பறக்கும் ஈராக்கிய விமானங்கள் சுட்டுவீழ்த்தப்படலாம்.

இதற்கென அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் போர் விமானங்கள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன என தெரியவருகிறது

இந்தத் தடையை மீற ஈராக்கிய அரசு உறுதி பூண்டிருப்பதாக தெரிவித்திருப்பதுடன் எப்பொழுது எங்கே இந்த ஆக்கிரமிப்பை எதிர்கொள்ள வேண்டும் என்பதை ஈராக்கே தீர்மானிக்கும் என தெரிவித்துள்ளது.

ஈராக்கின் தெற்குப் பகுதியில் வாழும் சியா முஸ்லிம் மக்களை ஈராக் படைகளின் தாக்குதலில் இருந்து பாதுகாக்கவே இந்த ஏற்பாடு என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஈராக்கின் தலைநகரம் பாக்தாத்தில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் ஆயிரக்கணக்கான மக்கள் இதில் பங்குபற்றிவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## குமாரியில் மா வரும்

[யாழ்ப்பாணம்]

''குமாரி'' கப்பல் ஒரு தொகுதி மாவுடன் திருக்கோணமலையில் இருந்து புறப்பட்டு பருத்தித்துறையை மிக விரைவில் வந்தடையும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

மேற்படி கப்பலை திருக்கோணமலைக்குஅனுப்பி மாஏற்றி வருவதற்கு அத்தியாவசிய சேவைகள் நாயகம் அனுமதி வழங்கியமையை அடுத்தே சில நாட்களுக்கு முன் மேற்படி கப்பல் புறப்பட்டது. (பா)

## முகமூடி கொள்ளையர் கைது

கம்பஹா பொலிசார் பயங்கர ஆயுதங்களை வைத்திருந்த ஏழு முகமூடிக் கொள்ளையர்களைக் கைது செய்துள்ளனர் என கூறப்படுகின்றது.

இக்குழு கம்பஹா, நிட்டம்புவ, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் 10 இற்கும் மேற்பட்ட கொள்ளைகளைநடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

அதேசமயம் கைது செய்ய முற்படுகையில் மோட்டார் சைக்கிளில் தப்பியோடிய கொள்ளையர்மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றவர் காயமடைந்தார். மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு சைகை செய்தும் நிறுத்தாமல் சென்றதாலேயே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டி ஏற்பட்டது என கிரியுல்ல பொலிசார் தெரிவித்தனர்

## ஆப்கானிஸ்தானில் தற்காலிக போர் நிறுத்தம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மத்தியானத்திலிருந்து மூன்று நாட்களுக்கு போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க ஆப்கானிஸ்தானில் போராடும் இரண்டு பிரிவுகளும் ஒப்புக்கொண்டு விட்டன என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் செய்திக் குறிப்பொன்று தெரிக்கின்றது.

ஆப்கானிஸ்தான் அரசுதரப்புப் பேச்சாளர் ஒருவர், வெளிநாட்டவர் காபூலை விட்டு வெளியேற வசதி செய்யவே இவ்வாறு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்,

பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது போன்று மூன்றுநாள் போர் நிறுத்தக்துக்கு ஹிஸ்பி இஸ்லாமிய குழுவின் தலைவர் ஹெக்மத்தியார் இணக்கம் தெரிவித்துள்ளதாக தனக்குத் தகவல் எதுவும் இல்லை என்றும் ஆனால், ஹெக்மத்தியார் தமது விருப்பத்தைக் குறிப்பாய் உணர்த்திபுள்ளார் என்றார் அவர்.

## கடித்த பாம்பை விழுங்கிய மனிதர்

(கோலாலம்பூர்)

பாம்பு கடித்ததினால் ஆத்திரமுற்ற ஒருவர் அந்தப் பாம்பை விழுங்கிய சம்பவம் ஒன்று மலேசியாவில் இடம் பெற்றுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

மலேசியாவின் வட கிழக்கு நகரான செரம்பானையைச் சேர்ந்த எம். கிருஷ்ணன் (வயது 45) என்றநபரே பாம்பை விழுங்கியவராவர்.

இவர் கடுமையான வயிற்று வலி காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இந்தியயுத்தவிமானம் நொருங்கியது

(டில்லி)

இந்திய எல்லைப்புறப் பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான சில்வர் கிங் எனப்படும் போர் விமானம் பயிற்சி ஓட்டமாகப் பறந்துகொண்டிருந்தபோது நொருங்கிக் கீழேவிழுந்தது.

இந்தச் சம்பவம் புதுடில்லி வான் பரப்பில் நிகழ்ந்தது. விமானத்தை ஓட்டிவந்த அதிகாரி உயிரிழந்தார்.

## குண்டு வெடிப்பு

நேற்று முன்தினம் அதிகாலை அல்ஜீரிய சர்வதேச விமான நிலையத்தில் குண்டு வெடிப்பொன்று இடம் பெற்றுள்ளது எனத் தெரிய வருகின்றது-

உடனடியாகக் கிடைத்த தகவல்களின் படி 18 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், குழந்தைகள் உட்பட நூறு பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது-

## வடமராட்சி கிழ. பகுதியில் சுற்றுலாச் செயலகம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் மருதங்கேணியில் திங்கள், வெள்ளிக்கிழமைகளில் இருநாள் சுற்றுலாச் செயலகத்தை நடாத்தி வருகின்றது.

இச்சுற்றுலாச் செயலகம் மருதங்கேணி அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பிரதேசசபைச் செயலகத்திலேயே நடைபெற்று வருகின்றது.

அப்பகுதி மக்கள் திங்கள் வெள்ளிக்கிழமைகளில் இச்சுற்றுலாச் செயலகத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாமென வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் திரு க கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (25)

## எண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் பாவனையாளர்களுக்கு மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் என்பன வழங்கப்படுகின்றன.

மேற்படி சங்கத்தின் கே. கே எஸ். வீதியில் உள்ள விற்பனைக் கிளையொன்றில் பாவனையாளரின் பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் லீற்றர் முப்பது ரூபாய் வீதமும்,ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் ஐம்பது ரூபா வீதமும்விநியோகிக்கப்படுகின்றன

இவ்விநியோகம்27 ஆம்திகதி வியாழக்கிழமை தொடக்கம் நடைபெறுகின்றது. (22)

## பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மங்கையர்க்கரசி கனகு என்பவரின் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும்,

## மாணவர்கள் தெரிவு

(பருத்தித்துறை)

வடமராட்சி சுருக்கெழுத்து கழகம் இளைஞர் யுவதிகளுக்கான இலவச தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு பயிற்சி வகுப்புக்களை இம்மாதம் 31ஆம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் ஆரம்பிக்கவுள்ளது- இவ் இலவச சுருக்கெழுத்து தட்டச்சு வகுப்புக்களில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ் மொழி மூலம் 63மாணவர்களும் ஆங்கில மொழி மூலம் 27 மாணவர்களும் தெரிவாகியுள்ளனர்- (25)

## இடம் பெயர்ந்த

... தமிழர் மேலும் வசதிகளைச் செய்து கொடுக்க அரச அதிகாரிகள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

... ணம் தவிர்ந்த ஏனைய மாகாணக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி அன்று அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் இந்த சுற்றுநிருபத்தில் இந்த உத்தரவின் பிரகாரம் தமது பழையஇடங்களுக்குத் திரும்பிச் செல்லாதிருக்கும் ஆசிரியர்கள் வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று அறிவுறுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதனாலேயே மாகாணக் கல்வி அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்ததாகவும் கூறப்படுகின்றது.

## புலிகளை

... பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சிறிலங்கா அரசு புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசுவதை இந்தியா தடுக்கவும் கூடாது. தடுக்கவும் முடியாது.

யாழ். குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளின் விளைவுகள் இந்தியாவில் 'உணரப்படாமல்' சிறிலங்கா உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இருப்பினும் சிறிலங்கா உடைந்து போவதைக் காண இந்தியா விரும்பவில்லை. சிறிலங்காவின் பிரச்சினைகளை சிறிலங்கா மக்களே தீர்த்துக் கொள்ள வேண்டும்.

எல்லாச் சமூகத்தினரும் திருப்தியடையக் கூடிய வகையில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, இங்கு அமைதி நிலை ஏற்படின் இந்தியா மகிழ்ச்சியடையும் எனவும் தெரிவித்தார்.


வடமராட்சிக் கல்விக் கோட்டம்
ஆண்டு 6 முதல் மேல்வகுப்புக்கள்
உள்ள சகல பாடசாலை

**அதிபர்களுக்கான அறிவிப்பு**

கல்விக் கோட்ட ரீதியாக மரம் நடுகை சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் வடமராட்சி கல்விக் கோட்ட பணிமனையில் (வேலாயுதம் மகாவித்தியாலயம் பருத்தித்துறை) நாளை 29 - 08 - 1992 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் மேற்படி சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

இணைப்பாளர்
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
வடமராட்சி.

[சி.-4952]



**45-ம் நாள் நினைவஞ்சலி**



வீரஜனனம் 30 — 05 — 1976

வீரச்சாவு 15 — 07 — 1992

**வீரவேங்கை முருகவேல்**
(முருகமூர்த்தி)
தங்கலிங்கம் கோணேஸ்வரன்

மணலாற்றில்
மரணித்த
மண்ணின் மைந்தனே ...
உன் —
மரணம்
தமிழீழத்தின்
ஜனனமாகிறது!

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
- குடும்பத்தினர்.

விவேகானந்தர் வீதி,
இணுவில்.

[3094]



**கண்ணீர் அஞ்சலி**

மாதகல் பகுதியில் நேற்றுக்காலை சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

**லெப். கேணல் ராஜன்**
[சோமசுந்தரம் சற்குணம், மாதகல்]

உட்பட 9 வேங்கைகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

சென் தோமஸ் விளையாட்டுக் கழகம்
மாதகல்.

(சி-4953)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 27-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5384

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

41-9457, 41-9089, 24-6336, 27-5662, 26-2414, 26-2737, 42-3726, 25-1908, 27-1187

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:

40-7584, 42-3965, 42-3964, 26-6775, 26-3632, 28-4672, 28-3528, 24-7941, 26-8419, 27-7952, 28-1049, 41-6893, 26-2272, 26-5143, 27-5482, 28-1020, 41-2659

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலகத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.